Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 04

ஞாயிற்றுக்கிழமை
30 நவம்பர் 2025

கார்த்திகை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 60

## வெள்ளப் பேரிடரால் 833,385 மக்கள் பாதிப்பு!

கொழும்பு, நவ. 30
டித்வா புயல் ஏற்படுத்திய பேரழிவுகள் காரணமாக, நாட்டில் 8 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் நேரடியா

>>>15

# இலங்கை முழுவதும் அவசரகாலச் சட்டம்!

### ஜனாதிபதி அநுர பிறப்பித்தார்



கொழும்பு, நவம்பர் 30
டித்வா புயல் நாட்டில் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், விரைவான மீட்பு நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி அநுர நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை அறிவித்துள்ளார்.

>>>15



முல்லைத்தீவு

## தகர்ந்தது நாயாற்றுப் பாலம்; போக்குவரத்து துண்டிப்பு!

விரிவு பக்கம்:-15

டித்வா புயலால்

## வடக்கு மாகாணத்தில் 131,290 பேர் பாதிப்பு!

யாழில் ஒருவர் பலி

விரிவு பக்கம்:-15



## இலங்கையில் இருந்து வெளியேறியது டித்வா

யாழ்ப்பாணம், நவம்பர் 30
கடந்த மூன்று நாள்களாக பேரழிவுகளை ஏற்படுத்திய டித்வா புயல், நேற்றுமாலை இலங்கையை விட்டு வெளியேறியது. நேற்று இரவு அதன் வெளிவளையம் கடலைச் சென்றடைந்தது – இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

>>>15

வெள்ளப் பேரிடர்

## முதியோர் இல்லத்தில் 11 பேர் உயிரிழப்பு!

குருநாகலில் துயரம்

விரிவு பக்கம்:-15

இடர்கால உதவியின்போது

## கிராம அலுவலர் மீது இளங்குமரன் எம்.பி. தாக்கு

எனினும் தன்மீதான குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுக்கின்றார் எம்.பி.

விரிவு பக்கம்:-15

## குளங்களின் நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு

தாழ்நிலப் பகுதி மக்கள் அவதானம்
பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், நவ. 30
டித்வா புயல் நாட்டைவிட்டு வெளியேறிய போதிலும், தாழ்நிலப் பகுதி மக்கள் மிகவும் அவதானமாக

>>>15

## குருதிக்கொடை முகாம்; துருவுகின்றது சி.ஐ.டி.!

யாழ்ப்பாணம், நவ. 30
நவம்பர் 26ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற குருதிக்கொடை

>>>15

நாடு முழுவதும்

## 200க்கும் மேற்பட்ட வீதிகளில் போக்குவரத்து துண்டிப்பு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவிப்பு

கொழும்பு, நவ. 30
சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவால் நாடு முழுவதும் இருநூறுக்கும் மேற்பட்ட வீதிகள் ஊடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் விமல் கண்டம்பி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர்

>>>15



## மன்னார் கட்டுக்கரைக் குளம் உடைப்பெடுக்கும் அபாயம்!

தாழ்வுநிலப்பகுதி மக்களை வெளியேறுமாறு உத்தரவு

மன்னார், நவ. 30
மன்னார் கட்டுக்கரை குளத்தில் நீர்வரவு அதிகரித்து குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட இடர்

>>>15

## எலிக்காய்ச்சலால் மற்றொருவர் பலி!

யாழ்., நவ. 30
யாழ்ப்பாணம் - சாவகச்சேரிப் பகுதியைச்

>>>15

முச்சந்தி முரளி

'குதிரையள் ஓடின பிறகு லாயத்தை மூடின மாதிரி புயல் கடந்த பிறகு அவசரகாலநிலை போடுகினம் பாருங்கோ'

## யாழ்.பல்கலையில் பகிடிவதை 19 மாணவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 30
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட 19 மாணவர்கள் நீதி

>>>15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இடர் பாதிப்பு; இந்திய உதவியை நாடுங்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

**கொழும்பு, நவ. 30**

**நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் வடக்கு - கிழக்கு பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. இந்த அனர்த்த நிலையைப் புரிந்துகொண்டு இலங்கை அரசாங்கம் நேரடியாக இந்தியத் தூதரகத்தை அணுகி பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

அனர்த்த நிலைமைகள் தொடர்பாக யாழ் . ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த பேருந்து கல்லோயாப் பகுதியில் நீரில் மூழ்கிய நிலையில் உயிருக்குப் போராடிய மக்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அதேபோல புதுக்குடியிருப்பு மருத்துவமனை முழுமையாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குக் கூட வசதிகள் இல்லை.

அவசர நோயாளர்களை வெளியில் கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தும்கூட அதனைச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு சில இடங்களில் உயிருக்குப் போராடும் சூழல் உள்ளது.

இந்தியாவில் உள்ள கடற்படை விமானப்படையின் பலத்தை இலங்கையின் கடற்படைக்கும் விமானப் படைக்கும் உள்ள பலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது. தீர்க்க முடியாத விடயங்களைக் கூட சுமுகமாக தீர்க்கக் கூடிய வல்லமை இந்தியக் கடற்படைக்கும் விமானப்படைக்கும் உள்ளது.

எனவே மக்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில் இலங்கை அரசாங்கத்திடமும் இந்திய தூதரகத்திடமும் ஒரு கோரிக்கையை விடுகின்றோம். நேரடியாக இந்திய தூதரகத்தை அணுகி இந்தப் பிரச்சனையை தீர்க்க ஆலோசனை பெற வேண்டும்.

மக்களைக் காப்பாற்றுவதாக இருந்தால் அவசரமாக இந்த விடயத்தை செய்ய வேண்டும் - என்றார். (ச-26)

# இலங்கை இடருக்கு ஜப்பான் இரங்கல்!

யாழ்ப்பாணம், நவ. 30

இலங்கை முழுவதும் பேரழிவுகளை ஏற்படுத்திய 'டித்வா' புயலால் பாதிக்கப்பட்டு தங்கள் அன்பு உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறேன் என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசொமதா தெரிவித்துள்ளார்.

இந்தக் கடினமான நேரத்தில் துயரங்களை எதிர்கொள்ளும் அனைவரின் துயரத்தையும் என் இதயம் உணர்கிறது. பாதிக்கப்பட்ட அனைவரும் வலிமை, நம்பிக்கை பெற்று விரைவில் பாதுகாப்பான மற்றும் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பிடுவீர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# வலி. வடக்குப் பிரதேசசபை பட்ஜெட் நிறைவேற்றம்!

யாழ்ப்பாணம், நவ. 30

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு -செலவுத் திட்ட சபை அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச சபையின் தவிசாளர் வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்தார். பாதீடு மீதான வாக்கெடுப்புத் தொடர்பான கோரிக்கையின்போது 35 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் வாக்கெடுப்பை நடத்தக் கோரினர்.

எனினும், 22 உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்தத் தேவையில்லை என்பதற்கமைய வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் கன்னி வரவு -செலவுத் திட்டம் நிறைவேறியது. (ச-66)

# இடரிலிருந்து மக்களைப் பாதுகாக்க யாழ்.மாநகரசபை தயார் நிலையில்

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புக்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான முழுமையான ஏற்பாடுகளுடன் மாநகரசபை நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என்று மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா தெரிவித்துள்ளார்.

குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளப்பாதிப்புக்களைக் குறைக்கும் முகமாக வெள்ளத்தை வழிந்தோடச் செய்வதற்கான தற்காலிக நடவடிக்கைகள் மற்றும் அதீத பாதிப்புகள் காரணமாக பிரதேச செயலகங்களால் ஏற்படுத்தப்படும் இடைத்தங்கல் முகாம்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட முக்கிமான சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக மாநகரசபையின் பொதுச் சுகாதார பொறியியற் பிரிவு, சுகாதாரப் பிரிவு, மின்சாரப் பகுதி மற்றும் தீயணைப்பு பிரிவு உள்ளிட்ட முக்கியமான திணைக்களங்களும், அதன் உத்தியோகத்தர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

மாநகர எல்லைப் பிரதேசங்களில் வெள்ளம் வழிந்தோடுவதற்கான தற்காலிக நடவடிக்கைகளை மாநகர ஊழியர்கள், உத்தியோகத்தர்களுடன். பிரதி முதல்வர், மராமத்துக்குழு தலைவர், சுகாதாரக்குழுத் தலைவர் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் குழு களத்தில் தொடர்ந்தும் பணியில் உள்ளனர்.

வெள்ளப் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகள் மற்றும் மாநகர சபையின் அடிப்படைத் தேவைகளுக்கான முறைப்பாடுகளை வழங்குவதற்காக பொது மக்கள் மாநகர சபையின் 021 222 2275 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு எந்நேரமும் அழைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

# வெள்ளத்தில் சிக்கி யாழில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட பகுதியில், வெள்ள அனர்த்தம் காரணமாக அந்தோணி பெர்னாண்டோ (வயது - 66) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை நெடுந்தீவு மற்றும் உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் இருவர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# இலங்கையில் இடர்நிலைமை; அமெரிக்கா 2 மில்லியன் டொலர்



கொழும்பு, நவ. 30

இலங்கையின் அவசர நிவாரண உதவிகளுக்கு அமெரிக்கா 2 மில்லியன் அமெரிக்க டொலரை நிவாரணமாக அறிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களை மீட்கும் பணிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க அமெரிக்க அரசாங்கம் தயாராக உள்ளது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பிரதிப் பேச்சாளர் டாமி பிகாட் தெரிவித்துள்ளார். 'டித்வா' புயலின் விளைவாகத் தொடர்ந்து மோசமான கலாநிலை,வெள்ளம், மண்சரிவு என்பன பதிவாகிவருகின்றன.


இந்த இடர்நிலைமைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)





மாவீரர் நாளை முன்னிட்டு இணுவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இணுவில் மஞ்சத்தடி அருணகிரி நாதர் மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





### இடரால் பாதிக்கப்பட்டோரை மீட்க

# நிவாரணப் பொருள்களுடன் வந்தது இந்திய மீட்புக்குழு

கொழும்பு,நவ. 30

**இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கைகளுக்காக 80 தொன் மருத்துவ மற்றும் சுகாதார நிவாரணப் பொருள்களுடன் கூடிய சிறப்பு விமானத்தில் இந்திய மீட்புக் குழு நாட்டை வந்தடைந்துள்ளது.**

இலங்கையில் தற்போது நிலவும் கடுமையான வானிலை, வெள்ளப் பேரழிவு மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களை ஆதரிப்பதற்காக இந்திய அரசு அவசர நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்திய-இலங்கை இருநாட்டு நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், உடனடி மனிதாபிமான உதவி வழங்குவதை இந்தியா ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் இந்திய விமானம் மூலம் நேற்று சனிக்கிழமை காலை நிவாரணப் பொருள்களுடன் இந்தியக்குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்தக் குழுவில் நான்கு பெண்களும் 76 ஆண்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. நான்கு மோப்ப நாய்களும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களை விரைவாக மீட்பதற்காக இந்தக்குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

இலங்கையின் கடுமையான பாதிப்புகளை சமாளிக்க இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கத் தயார் எனவும் இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

## வெள்ளத்தில் நீர்கொழும்பு

கொழும்பு,நவ. 30

நாட்டில் தற்போது ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக நீர்கொழும்பிலுள்ள பெரியமுல்லை, கட்டுவை, தளுபத்தை ஆகிய பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியில் தளுபத்தை பாலம் அருகில் வெள்ள நீர் அதிகமாக இருப்பதன் காரணமாக அந்தப் பகுதியின் ஊடாக வாகனங்கள் மற்றும் மக்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ச)

## அநுராதபுரம் கைதிகள் பாடசாலையில்

கொழும்பு,நவ. 30


அநுராதபுரம் சிறைச்சாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையினால் அங்கிருந்த கைதிகள் பாதுகாப்பாக அநுராதபுரம் பாடசாலையொன்றிலுள்ள தடுப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

### இடர் அனர்த்தம்

## புலம்பெயர்ந்தவர்களும் உதவிக்கரம் நீட்டலாம்!

கொழும்பு,நவ. 30

இலங்கையில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கும் வெளிநாட்டினருக்கும் அரசாங்கத்தினால் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



Foreign receipts

USD A/C

Account Name – Central Bank of Sri Lanka

Account No. – 021083514

Swift Code – CBCELKLX

Beneficiary's Bank – Federal Reserve Bank, New York

Swift Code of the Beneficiary's Bank – FRNYUS33

Remarks – Credit to DST's Dollar A/C 45013

Local Receipts

Account Name – Deputy Secretary to the Treasury

Account No – 2026450

Bank – Bank of Ceylon

LKR A/C

Account Name – Deputy Secretary to the Treasury

Bank – Central Bank of Sri Lanka

Account No. – 90516

Swift Code – CBCELKLX

நிதி உதவிகளை வைப்புச் செய்வதற்கான வங்கிக் கணக்கு எண்களை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் இந்த நாட்டில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் பெறலாம்.

உதவித் தொகையை உள்ளூர் நாணயத்திலும் (ரூபா) அமெரிக்க டொலரிலும் வைப்புச்செய்யலாம். இதற்காக இரண்டு கணக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## சுகாதாரப் பணியாளர்களின் விடுமுறைகள் இரத்து!

கொழும்பு,நவ. 30

அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்கும் நேற்றுமுன்தினம் முதல் மறு அறிவித்தல்வரை விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் நான்காம் திகதிவரை ஒரு வார காலத்துக்குப் பொதுமக்களுக்குச் சுகாதார வசதிகளைத் தடையின்றி வழங்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கலா ஓயா வெள்ளத்தில் சிக்குண்ட பயணிகள் பஸ்

*67 பேர் மீட்பு; ஒருவர் பலி*

கொழும்பு,நவ. 30

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் உள்ள கலா ஓயாவை அண்மித்த பகுதியில் பேருந்தில் சிக்கிய நிலையில் வீடொன்றின் கூரையில் தங்கியிருந்த 68 பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

எனினும் அவர்களில் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.

மீட்கப்பட்டவர்களில் வெளிநாட்டுப் பெண் ஒருவரும் அடங்குகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு உண்டு.

**இடபம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் அல்லது நண்பர்கள் மூலம் புதிய ஆடை, ஆபர ணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாக னத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**மிதுனம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்வழியில் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். சிலருக்கு நீண்டநாளாக முடியாமல் இருந்த தெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். தாய்மாமன் வகையில் நீண்டநாளாக எதிர்பார்த்த உதவி இன்று கிடைக்கக்கூடும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** உடல்நலனில் கவனம் செலுத்தவேண்டிய நாள். சகோதரர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. சிலருக்கு திடீர் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**துலாம்:** ஆனால், புதியமுயற்சி சாதகமாக முடியும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள். தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம்தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாக முடியும். தேவையான பணம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் மனச் சஞ்சலம் உண்டாகும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படக் கூடும். பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். முடிவில் வாழ்க்கைத்துணை யின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். கோயில்களுக்குச் சென்று வருவீர்கள்.


**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தா லும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கி டையே சிறுசிறு வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்.



சீரற்ற காலநிலை காரணமாக ஏ-35 பிரதான வீதியின் விசுவமடு, மாணிக்க விநாயகர் ஆலயத்தை அண்மித்த பகுதியில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்கின்றது.

இப்பகுதியின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் செய்வோர் அவதானமாகப் பயணிக்குமாறு முல் லைத்தீவு பிரதேசசபைத் தவிசாளர் கரிகாலன் தெரித்துள்ளார். (ச-113)







கிளிநொச்சி இரணைமடுக்குளத் தின் வான்கதவுகள் திறந்து விடப் பட்டுள்ளதால் தாழ்நிலப்பகுதி கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொடர்ச்சியாக பெய்துவரும் கன மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்கு பகுதிகளில் உள்ள அனைத்துக் குளங்களும் வான் பாய்கின்றன.

பல இடங்களில் மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தங் கியுள்ளனர். வீடுகளுக்குள் வெள் ளம் புகுந்தமையால் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வரு கின்றனர். (ச-இ)


## மன்னார் - யாழ்ப்பாணம் பயணிகள் அவதானம்!

மன்னார், நவ. 30

மன்னார் - யாழ்ப்பாணம்வரை செல்லும் வீதி முற்றாக வெள் ளத்தில் மூழ்கியுள்ளது. அத னால் பயணங்களைத் தவிர்க் குமாறு மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏ-32 வீதி மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம்வரை செல்லும் வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ் கியுள்ளது.

குறித்த வீதியூடாகப் பெரிய மற் றும் சிறிய வாகனங்களில் பய ணம் செய்வதைப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் முற்றா கத் தவிர்க்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்துள்ளார். (ச-56)





வவுனியா - குட்செட்வீதி கருமாரி அம்மன் நிர்வாகத்தினர், இளைஞர ணியினர் இணைந்து திருநாவற்குளம் வைரவர்புளியங்குளம் பகுதி களைச் சேர்ந்த 200 க்கு மேற்பட்ட இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவுகளை நேற்றுமுன்தினம் இரவு வழங்கினர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம் (நவம்பர்)

" குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப்போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்"

-- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)--

# தொலைத்தொடர்பும் அவசியம்

டித்வா புயல் இலங்கையை உலுக்கி விட்டிருக்கிறது. நாடுமுழுதும் மண்சரிவுகள், வெள்ளப்பெருக்குகள், குளங்கள் உடைப்பெடுத்தல், மின்தடை, போக்குவரத்துத் துண்டிப்பு என மக்கள் அனுபவிக்கின்ற துயரங்கள் எண்ணற்றவை. இதுவரை 123 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்ற தகவல் நாட்டையே துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போன்று 'டித்வா' புயலால் தொலைத்தொடர்பு சேவைகளும் செயலிழந்து போனமை, இழப்புகளை இன்னும் அதிகப்படுத்தியிருப்பதோடு, பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள் சென்றடைவதையும் தாமதப்படுத்தியிருக்கிறது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளம் வீதிகளை விழுங்கிக்கொண்டிருந்த நேரத்தில்,மக்கள் உயிருக்கு ஆபத்து நேர்ந்த நிலையிலும் தொலைத்தொடர்பு சேவைகளும் செயலிழப்பால், தங்களின் நிலையை யாரிடமும் தெரிவிக்க முடியாத இக்கட்டானநிலை உருவானது. பல இடங்களில் உடனடி உதவி தேவையாக இருந்த போதும், பொதுமக்கள், மீட்புப் பிரிவுகள், மருத்துவக் குழுக்கள் ஆகியோருக்கிடையிலான தொடர்பு முற்றிலும் தகர்ந்து போனது. முல்லைத்தீவில் மின்சாரம் மட்டுமல்லாது தொலைத்தொடர்புக் கோபுரங்களும் செயலிழந்ததால், வானிலை எச்சரிக்கை, குளங்கள் உடையும் அபாயம், வெளியேற்ற உத்தரவுகள், அவசர அறிவிப்புகள் எதையும் மக்கள் பெற முடியாமல் உயிர் அச்சத்துக்குள் தள்ளப்பட்டனர்.


இத்தகைய சூழலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மின்சாரம், நீர்வழங்கல், சுகாதார சேவைகள், பொதுப் போக்குவரத்து, சமையல் எரிவாயு விநியோகம் போன்ற பல துறைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்துள்ளது. இருப்பினும் தொலைத்தொடர்பாடல் சேவையும் அத்தியாவசிய சேவைகளில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் எந்த இடரின்போதும் முதலில் செயலிழக்கும் துறைகளில் தொலைத்தொடர்பு அடங்கினாலும், அதேநேரம் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான அடிப்படை கருவியாகவும் அதுவே அமைகிறது. வெள்ளம் எங்கே அதிகரிக்கிறது? எந்தப் பகுதி உடனடி வெளியேற்றத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்? எந்தப் பாலம் மூழ்கியுள்ளது? உதவி கேட்டு கூப்பிடுபவர்கள் எங்கிருக்கிறார்கள்? பாதிக்கப்பட்டோரிடம் சென்றடைந்த மீட்புக் குழுக்கள் எங்கு உதவி தேவைப்படுகிறது? இதற்கான ஒரே நம்பகமான வழி தொலைத்தொடர்பே. அது செயலிழந்தால் மக்கள் இருளில் அலைந்து திரியும் நிலையே உருவாகும். டித்வா புயலின் போது ஏற்பட்ட துயரங்களே இதற்கு துல்லியமான சாட்சி.

எனவே அரசாங்கம் அவசரநிலையில் செயல்படும் அத்தியாவசிய சேவைகளின் பட்டியலில் தொலைத்தொடர்பு சேவைகளை உடனடியாக இணைக்க வேண்டும். இது வெறும் தொழில்நுட்ப முடிவு அல்ல; இன்றைய பேரிடர் காலத்தில் மக்களின் உயிரைக் காக்கும் அத்திவாசியமான தேவை.

இலங்கை வருடா வருடம் புயல், மழை, மண்சரிவு, வெள்ள அபாயங்களை எதிர்கொள்ள வேண்டிய ஒன்று என்பதால், பொதுமக்களின் தகவல் அணுகலையும், தகவல் பரிமாற்றத்தையும் காக்கும் தொலைத்தொடர்பு சேவையை அத்தியாவசிய சேவைகளில் சேர்ப்பது இனி விருப்பத் தீர்மானமல்ல, தவிர்க்க முடியாத கட்டாயம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## நிவாரண உதவிக்கு 50,000 அமெ.டொலர் மாலைதீவு அறிவிப்பு!

கொழும்பு,நவ. 30
இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு மாலைதீவு நிவாரணங்களை அறிவித்துள்ளது.
இதன்படி, 50,000 அமெரிக்க டொலர் நிதியுதவி மற்றும் 25,000 டுனா மீன் ரின்கள் என்பவற்றை நன்கொடை மூலம் நிவாரண உதவியாக வழங்க மாலைதீவு அரசாங்கம் முன்வந்துள்ளது.
டித்வா சூறாவளியால் இலங்கை பேரிடர்களை எதிர்கொண்டுள்ள நிலையில் மாலைதீவு மக்களின் சார்பாக மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்க மாலைதீவு அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.
இந்த நன்கொடை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்குப் பங்களிக்கும் என மாலைதீவு நம்புகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கொழும்பு துறைமுக செயற்பாடு நிறுத்தம்

கொழும்பு,நவ. 30
தீவிரமான வானிலை காரணமாக கொழும்புத் துறைமுகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.
துறைமுகப் பகுதிகளில் பாதுகாப்பு ஆபத்துகள் உருவாக்கியுள்ளதால் எந்தவித அனர்த்தமும் ஏற்படாத வகையில் செயற்பாடுகளை நிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தடைப்பட்டது நீர் விநியோகம்

கொழும்பு,நவ. 30
நாட்டில் நிலவும் சீரற்றநிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பல நீர் மூலங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் நீரில் மூழ்கி யுள்ளன என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. குறிப்பாக கண்டி மாவட்டத்தில் உள்ள நிலையங்கள் முற்றிலும் செயலிழந்துள்ளன. (ச-இ)

## அதிக மழைவீழ்ச்சி கண்டியில் பதிவு!

கொழும்பு,நவ. 30
கடந்த 24 மணித்தியாலத்தில் நாட்டில் கனமழை கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.
அதன்படி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கண்டியின் நில்லம்பே பகுதியில் 431 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. அதேநேரம், கேகாலை மாவட்டத்தில் 277.8 மில்லிமீற்றர் மழையும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொக்கணைப் பகுதியில் 274 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளது. (ச)




## நிவாரண மையமாக பிரேமதாஸ மைதானம்

கொழும்பு,நவ. 30
பேரிடர் ஏற்பட்டால் 3,000 பேர் வரை தங்கக்கூடிய அவசர நிவாரண மையமாக ஆர். பிரேமதாஸ சர்வதேச மைதானம் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளது.
நாட்டின் பல பகுதிகளைப் பாதிக்கும் வெள்ளம் மற்றும் சீரற்ற காலநிலை குறித்த கவலைகள் அதிகரித்துவரும் நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிராந்திய மேம்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - கார்த்திகை 15
01.12.2025
சுபநேரம் : 12.14 - 01.44
ராகுகாலம் : 07.44 - 09.14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 07 - 1951

மறைவு 29 - 11 - 2025

## நடராசா வேலாயுதபிள்ளை

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், சுதுமலையில் வசித்தவருமான நடராசா வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (29.11.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - அழகம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் ஸ்ரீபதி, சிவதேவி, இரஞ்சிதமலர், ஸ்ரீகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-11-2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/60031) J-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (01.11.2025) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்

## தம்பியப்பா பாலதயானந்தன்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த 29.11.2025 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (01.12.2025) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மதியபோசன நிகழ்வானது பிற்பகல் 12.30 மணியளவில் **"இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபத்தில்"** நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல: 22, சைவப்பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்
0771962098, 0773076902

# துயர் பகிர்கின்றோம்



குரும்பசிட்டி சன்மார்க்கசபையின்
துணை செயலாளர் **திரு.த.ஜங்கரன்**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர். தம்பித்துரை மங்களேஸ்வரி**

அவர்கள் நியூசிலாந்தில் இயற்கை எய்தியமையினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோற்றம் 15.12.1940

மறைவு 27.11.2025

குரும்பசிட்டி
சன்மார்க்க சபையினர்

(CR 60029) E

## வெள்ள நிவாரண பணிகளுக்காக மீன்பிடிப் படகுகள்

நாடு முழுவதும் பரவிவரும் வெள்ள அனர்த்த நிலைமையை அடுத்து, பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகளுக்காக மீன்பிடிப் படகுகளை உடனடியாகப் பயன்படுத்துமாறு, கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் பிரதி அமைச்சர், ரத்ன கமகே அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து, தேசிய மீட்புப் பணிக்கு ஆதரவளிக்கும் முகமாக, கொழும்பிலிருந்து 30 படகுகள், நீர்கொழும்பிலிருந்து 20 படகுகள் மற்றும் அளுத்கமவிலிருந்து 20 படகுகளை உடனடியாக அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை கடற்றொழில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

(ச-இ)

# உம் நினைவுகளின் பிடிமானங்களோடு நாம்

இதயங்கள் இரணமான
இருபத்தைந்து ஆண்டுகளில்

அன்றிலொன்று இணைபிரிந்த
இருபத்தொன்பது ஆண்டுகளில்





உதயம் 03.08.1942 — அஸ்தமனம் 30.11.2000

அமரர்
**இராசு செல்வரட்ணம் (சித்தப்பா)**
(ஸ்தாபகர், அம்பாள் மரக்காலை,
வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.

மண்மகிழ 19.10.1976 — கண் நெகிழ 21.08.1996

அமரர்
**செல்வி றஜனி செல்வரட்ணம்**
(A/L 1995, வர்த்தகப்பிரிவு மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி)

விழிகளின் துளிகளை மொழியாக்கி
வலிகளின் ரணங்களைக் கருத்தாக்கிப்
புரிதலின் துணையோடு வாழ்கின்றோம் – உம்
'பரிவு' கள் ஒவ்வொரு நொடியும்
நம் வழித்துணை என்பதால்......

"செல்வபதி"
256, நாவலர் வீதி,
இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1932



மறைவு 29 . 11 . 2025

## தம்பிராசா இராசம்மா

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா இராசம்மா அவர்கள் நேற்று (29.11.2025) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் நாகேஸ்வரி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, நந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, வள்ளியம்மை, தங்கம்மா மற்றும் நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், முகுந்தன், வினித்தா, சுமணன், தனுசா, கஜனி, தர்மிகா, சுபாசினி, கெஜரட்ணசிங்கம், தர்மியா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டில்சான், அனிக்கா, வினுசன், சுபீட்சா, துசான், யுவந்தன், பிரசாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எழுதுமட்டுவாழ் இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் 077 370 0155
மருமகன் 077 704 9527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING - 2026**
**NOTICE OF MEETING**

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Monday, 12th January 2026 at 11.30 a.m. at the **Auditorium, Clinical Teaching and Research Block (CTRB) Faculty of Medicine, University of Jaffna.** for the following purposes:

1. To receive and consider the annual report of the committee of management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2025 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for the year 2026.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management,

**Honorary Secretary**
**30th November 2025**

(CS 60008) E

# முஸ்லிம் பாடசாலைகளின் விடுமுறை நீடிப்பு

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகச் சகல முஸ்லிம் பாடசாலைகளினதும் விடுமுறைகள் நீடிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக சகல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் கடந்த 27ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்பட்டது.

இதன்படி குறித்த பாடசாலைகளுக்கு எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்தது. எனினும் சகல முஸ்லிம் பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்படும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. (ச-இ)

# அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குக

கொழும்பு, நவ. 30

நாட்டின் பல பாகங்களில் நிலவும் அதிதீவிர காலநிலை காரணமாக அத்தியாவசியமற்ற மற்றும் ஆபத்தான பயணங்களை மக்கள் தவிர்த்துக்கொள்ளுமாறு இராணுவத் தளபதி லசந்த ரொட்ரிக்கோ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மோசமான காலநிலை காரணமாகப் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்வதைத் தவிருங்கள்.

நீங்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்வதால் உங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திக்கொள்வதுடன், அந்த உயிர்களைக் காப்பாற்ற வரும் இராணுவம், கடற்படை, விமானப் படைப் பணியாளர்களின் உயிர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கிறீர்கள்.

அரசால் வழங்கப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தைவிட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டால், தயவுசெய்து அந்த இடத்திலிருந்து வெளியேறுங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வேலை வாய்ப்பு

**வடமாகாணத்தில் இயங்கும் பிரபலமான தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.**

- **Site Engineers -** (02) B.Sc.Civil Engineer or Equivalent degree with IESL & ECSL membership (தொடர்புடைய தொழிநுட்பத் தகுதி / குறைந்தது மூன்று ஆண்டுகள் தொழில்நுட்ப அனுபவம் / குறைந்தது ஒரு ஆண்டு Road Project அனுபவம்)
- **Technical Officers -** (02) (NCT(Civil) NVQ Level 5 தொடர்புடைய தொழிநுட்பத் தகுதி) குறைந்தது மூன்று ஆண்டுகள் தொழில்நுட்ப அனுபவம் / குறைந்தது ஒரு ஆண்டு Road Project அனுபவம்)
- **Quantity Surveyors -** (02) Diploma in QS or Equivalent குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம்.
- **QA Manager -** (01) B.Sc.Civil Engineer or Equivalent degree with IESL & ECSL membership (தொடர்புடைய தொழிநுட்பத் தகுதி / குறைந்தது மூன்று ஆண்டுகள் தொழில்நுட்ப அனுபவம் / குறைந்தது ஒரு ஆண்டு Road Project அனுபவம்)
- **Health, Safety, Environment and Social Officer -** (02) Certificate with experience on relevant fields குறைந்தது மூன்று ஆண்டுகள் தொழில்நுட்ப அனுபவம்.
- **Drivers (ஓட்டுநர்) -** (02) O/L NVQ Level 04 / செல்லுபடியாகும் லைசன்ஸ் குறைந்தது மூன்று ஆண்டுகள் ஒட்டுனர் அனுபவம்.

சம்பளம்: நிறுவன விதிமுறைகளின்படி (அனுபவத்தைப் பொறுத்து) பேசித்தீர்மானிக்கப்படும்.

உங்கள் சுயவிவரக் கோவையை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**hr.northoffice@gmail.com**

(CS 59999) E

**வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை**

**இடம் 01 : திருநெல்வேலி (பகல் மட்டும்)**

**இடம் 02 : கோண்டாவில் (தங்கி நின்று பணிபுரிவதற்கு)**

**தொடர்பு: 077 036 5362**

(CS 60026) E

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை பிற்போடப்பட்டுள்ளது



**அமரர் கலாமணிதேவி (வேவி) நாகராஜா**

வண்ணை ஸ்ரீகாமாட்சி ஆலய திருமண மண்டபத்தில் நேற்று (29.11.2025) சனிக்கிழமை நடைபெற இருந்த அமரர் கலாமணிதேவி (வேவி) நாகராஜா அவர்களின் 31ம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எதிர்வரும் (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருவதோடு சிரமத்திற்கு வருந்துகிறோம்.

72, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# 1,696 குடும்பங்கள் கொழும்பில் பாதிப்பு

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 1,696 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதி 20 தற்காலிக பாதுகாப்புத் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, 289 பேர் தற்காலிக தங்குமிடங்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1970



மறைவு
28 . 11 . 2025

### சிவதாசன் சந்திரகாந்தன்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், புத்தளம் கற்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவதாசன் சந்திரகாந்தன் (காந்தன்) அவர்கள் நேற்றுமுன்தினம் (28.11.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவதாசன் (ஓய்வுபெற்ற அதிபர்) - காலஞ்சென்ற புஷ்பராணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், யோகராசா - நவமலர் தம்பதியரின் மருமகனும், குமாரபாமா (ராதா) அவர்களின் அன்புக் கணவரும், துதிகாந், டேமி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதா, சந்திரகுமார், சந்திரவதனம், கோகிலவாணி, சந்திரசுபநேமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஏபிரகாம் பிரேமரட்ண (பிரேமன்), றக்ஷாயினி, தக்ஷாயினி, பிரபாகரன், நயந்தினி ஆகியோரின் மைத்துனரும், பிரநிதா, கஜந்தன், டெஷாயினி, நந்திகா ஆகியோரின் பெரிய மாமாவும், கஜீன், விஸ்வர், கிரிஷிகேசன், நிகோசினி ஆகியோரின், பெரிய தந்தையும், மோகனபாமா மற்றும் காலஞ்சென்றவர்களான மதனரூபன், சத்தியரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சந்தை வீதி, சுன்னாகத்தில் திரு. ஏபிரகாம் பிரேமரட்ண (பிரேமன்) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**சந்தை வீதி,**
**சுன்னாகம்.**

(CS/60034) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 10 . 1942



மறைவு
29 . 11 . 2025

### ஸ்கந்தராஜா தர்மவதி அம்மா

கட்டுவன் சைவமடத்தைப் பிறப்பிடமாகவும், இருபாலை டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்கந்தராஜா தர்மவதி அம்மா அவர்கள் நேற்று (29.11.2025) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஈஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - நீலாயதாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபை ஸ்கந்தராஜா வின் அன்பு மனைவியும், தாரிணியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - உடுவில்) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-11-2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் டச்சு வீதி, இருபாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நெச்சிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**தாரிணி (மகள்) - 076 048 8238**

டச்சு வீதி,
இருபாலை

(CS/30819) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பால்நிலை சார் வன்முறையின் சலனமற்ற நெருக்கடி

ஒரு நாள் மாலை நேரம், கூட்டம் நிறைந்த கொழும்பு பொலிஸ் நிலையத்தில், ஒரு இளம் பெண் தனது பெற்றோருக்கு அருகில், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு நடுவில் அமர்ந்திருப்பதை காணக் கிடைத்தது. அவர்கள் அச்சுறுத்தப்பட்டு, சோர்வடைந்து, அடுத்து என்ன நடக்கும் என்று நிச்சயமற்ற தன்மை கொண்டவர்களாக இருந்தனர்.

"அவள் என்ன உடுத்தியிருந்தாள்?"

"அவள் ஏன் அந்த நேரத்தில் வெளியில் சென்றிருந்தாள்?"

"அவள் யாரையாவது சந்திக்க சென்றாளா?"

அவள் ஏற்கனவே வலியிலும், அதிர்ச்சியிலும், அமைதியாக, அமர்ந்திருந்த நிலையில், அவளது பெற்றோர் உதவிக்காக மன்றாடுவது அவர்களது முகத்தில் தெரிகிறது.

இதுவே ஆயிரக்கணக்கான இலங்கை பெண்கள் எதிர்கொள்ளும் யதார்த்தமாகவும் உள்ளது. பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை இங்கு பரவலாக காணப்படுகின்றது. இது பழங்காலத்திலிருந்த பால்நிலை ரீதியான விதிமுறைகள் மற்றும் எண்ணங்களால் உருவான, கடுமையான கோட்பாடுகள் வெளிப்படையான பழமைவாத சமூக கலாசாரத்திற்கு வழிவகுக்கிறது.

பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைஇலங்கையின் மிகவும் பரவலான மனித உரிமை பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆய்வுகளின் அடிப்படையில், இலங்கையில் ஐந்து பெண்களில் ஒருவர் தங்கள் வாழ்நாளில் ஒரு தடவையேனும் உடல் ரீதியான அல்லது பாலியல் வன்முறை சார்ந்த சம்பவத்தை எதிர்கொள்வதாக கூறப்படுகின்றது. பெரும்பாலும், அவள் அறிந்த ஒருவராலேயே இதற்கு முகம் கொடுக்கிறாள். ஆயினும், உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் இந்த பிரச்சினையின் ஒரு சிறு பகுதியை மாத்திரமே வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை"முன்னேற்றகரமானது என்பதுடன் முற்றிலும் பாகுபாடற்றது" என ஒரு வஞ்சப் புகழ்ச்சியாக கூறலாம். வயது, இனம், பூர்வீகம் மற்றும் சமூக நிலை ஆகியன எந்தப் பாதுகாப்பையும் வழங்குவதில்லை. இது கிட்டத்தட்ட ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்நாளில் ஏதோ ஒரு வடிவத்தில் எதிர்கொள்ளும் ஒரு துன்பமாகும். எமது சமூகத்தில், பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை என்பது மிகவும் பொதுவான ஒரு யதார்த்தமான விடயமாகவே மாறி உள்ளதோடு மிகவும் ஆழமாகப் பதிந்துள்ளது. அதன் பழக்கம் காரணமாக, அதன் பயங்கரம் அடிக்கடி மறைக்கப்படுகிறது.

இலங்கையில் முற்போக்கான சட்டங்கள் காணப்படுகின்றன. இதில் வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டம் (Prevention of Domestic Violence Act) மற்றும் வலுவூட்டப்பட்ட தண்டனைக் கோவைச் சட்ட விதிகள் ஆகியன உள்ளடங்குகின்றன. இவை பெண்களுக்கான பாதுகாப்பு உத்தரவுகள் (Potection Orders), பொலிஸ் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு, 24 மணி நேர அழைப்பு சேவைகள் மற்றும் மருத்துவமனைகளில் நிறுவப்பட்ட நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் மையங்கள் (Crisis Centres) உள்ளிட்ட பல முக்கியமான வழிமுறைகளை அறிமுகப்படுத்த வழி வகுத்துள்ளன. இதிலிருந்து மீண்டு வந்தவர்களுக்கு உளவியல் ஆலோசனை, தங்குமிடம் மற்றும் சட்ட உதவி ஆகியவற்றை சிவில் சமூக அமைப்புகள் தொடர்ச்சியாக வழங்குகின்றன. ஆனால் இந்தச் சேவைகளில் பல விடயங்கள் போதிய நிதி ஆதாரவுகள் இன்றியதாக காணப்படுகின்றன அல்லது நாடு முழுவதும் சம அளவில் கிடைப்பதில்லை. முன்னணி அதிகாரிகள், பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை வழக்குகளை எவ்வாறு உணர்வுபூர்வமாகக் கையாள்வது என்பது குறித்த உரிய பயிற்சி இல்லாமல் காணப்படுகிறார்கள். அல்லது ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு அனுப்பப்படும் ஏராளமான வழக்குகளால் அவர்களது மேசைகள் நிரம்பி வழிகின்றன. சட்ட நடைமுறைகள் மெதுவான போக்கையே கொண்டுள்ளன. அத்துடன், வயது வந்த பெண்களுக்கான தங்குமிடங்கள் பற்றாக்குறையாக உள்ளன. இருப்பினும், முக்கிய பிரச்சினை யாதெனில், இது சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாகும். உதவி தேடுகின்ற, பிரச்சினைகளிலிருந்து மீண்டுவந்தவர்கள், பாதுகாப்பு பெறுவதை விட பகைமையை உணரும் ஒரு கட்டமைப்பினுள் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த பிரச்சினைக்கு அரச நிறுவனங்கள் மற்றும் "கட்டமைப்பை" மாத்திரம் குறை கூற முடியாது. ஒரு சமூகம் எனும் வகையில் எமது கூட்டுப் பதிலானது, தவறான வழிகளில் அமைவதாக உள்ளது. குறிப்பாக நம்பிக்கையின்மை, விசாரணையில் இடைவிலகல், இச்சம்பவங்களிலிருந்து மீண்டு வந்தவர்களை களங்கப்படுத்துதல், மீண்டும் அதற்கு பலியாக்குதல் ஆகியவற்றை கூறலாம். நாம் அவர்களின் அனுபவங்களைக் கலைத்து, நிராகரித்து, அவர்களின் வலியை பார்ப்பதிலிரந்து கண்களை தூரமாக்கிக் கொண்டுள்ளோம். அத்துடன், அவர்கள் சகித்துக்கொண்டு வாழும் தனிமை, அந்நியப்படுதல், உரிமையிழத்தல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் பொறுப்பிலிருந்து நாம் விலகியுள்ளோம். ஞபுடீஏ இலிருந்து மீண்டு வந்தவர்களுக்கு ஆதரவளிக்கவும், வலுவூட்டவும், நீதியை வழங்கவும் வேண்டிய ஒரு கட்டமைப்பில் பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லாமைக்கு காரணம் இல்லாமலும் இல்லை. பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு உண்மையான அதிகாரமளித்தல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான எமது கடினமான போராட்டத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய மிகப்பெரிய தடைகளில் இதுவும் ஒன்றாகும்.

பால்நிலை சார் வன்முறை குறித்த மனப்பாங்கை ஏற்படுத்துகின்ற, சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ள பால்நிலை விதிமுறைகளை ஒரே இரவில் நாம் கடந்து செல்வது இயலாத காரியமாகும். சம்மதம், பொறுப்புக்கூறல், பார்த்திருப்பவரின் தலையீடு, உடல் குறித்த சுயாட்சி, கூட்டணித்துவம், பால்நிலை சமத்துவம் ஆகியன குறித்து நாம் மிகவும் ஆர்வத்துடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும். இந்த உரையாடல்களில் பங்கேற்பதற்கான வாய்ப்பை நகர்ப்புற கட்டமைப்புகளில் மட்டுமல்லாமல், மிகவும் பாதிக்கப்படக்கூடிய, குறைந்த வருமானம் கொண்ட மற்றும் கிராமிய சமூகங்களுக்கும் நீடிக்க வேண்டும்.

பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையினை முடிவுக்குக் கொண்டுவர சட்டங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் அதிகம் தேவைப்படுகிறது. இது சமூக மனப்பான்மையிலும் நிறுவன நடைமுறைகளிலும் ஒரு அடிப்படை மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கிறது. இதில் விரிவான பாலியல் கல்வி, சமூக மட்டத்திலான விழிப்புணர்வு பிரசாரங்கள், வலுவான பொலிஸ் பொறுப்புக்கூறல், அதிர்ச்சி குறித்த சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் விரைவான நீதித்துறை செயன்முறைகள் ஆகியன உள்ளடங்குகின்றன.

ஆயினும் மிக முக்கியமாக, இவ்விடயங்களிலிருந்து மீண்டு வந்தவர்கள் மீது நம்பிக்கை வைப்பதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் நீதிக்கான தேடலை ஆதரிப்பதற்கும் ஒரு கூட்டு உறுதிப்பாடு அவசியமாகும்.

பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடானது, நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரை வருடாந்தம் அனுசரிக்கப்படும் ஒரு உலகளாவிய பிரசாரத் திட்டமாகும். இது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கூட்டு நடவடிக்கையைத் தூண்டவுமான நோக்கத்தை கொண்டுள்ளது. இதற்கு இணங்க, இவ்வருடம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP), அதன் முக்கிய பங்காளர்களுடன் இணைந்து,பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையிலிருந்து மீண்டு வந்த ஒருவரின் பயணத்தை கண்டறியும் ஒரு நடைபயண அனுபவத்தை 'அவளின் பார்வையில்' , Through Her Eyes, ඇගේ දෑසින් எனும் தலைப்பின் ஊடாக முன்வைக்கிறது







# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 03 . 01 . 1936

மறைவு 30 . 10 . 2025

**மனுவல் கிறிஸ்ரி ஜீவரெட்ணம்**

**(ஓய்வுநிலை உத்தியோகத்தர், இ.போ.ச - கோண்டாவில்)**

நினைவுகளை எமக்கு சொந்தமாக்கி
நிழலாய் நின்று காக்கும் தந்தையே
உம் வழிப்பாதையில் சீராய் நடந்து
இறைவன் துணையில் வாழ ஆசீர்தர
விண்ணகத் தந்தையுடன் ஒன்றித்திரும்.

40/2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
மகன் - 075 469 6319

(CS/60032) J-1



## பகிரங்க அறிவித்தல்.
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை (காங்கேசன்துறை)
### 2026ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் (வரைபு) பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பித்தல்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைபு) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டப்பிரிவு 168க்கமைய தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் கருத்தாய்வுக்காக 2025.12.01 ஆம் திகதியிலிருந்து 2025.12.10 ஆம் திகதி வரை வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

குறித்த பாதீட்டில் 2026ஆம் ஆண்டில் சேகரிக்கக்கூடிய வருமானங்கள், செலவின விடயப் பரப்புக்கள் சம்மந்தமாகவும் எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளதும் ஏற்கனவே தங்களின் பிரதிநிதிகளான பிரதேசசபையின் கௌரவ உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டதுமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளக்கப்பட்டுள்ளது. விடயம் தொடர்பில் கருத்துக்கள் ஏதும் இருப்பின் 2025.12.10 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக தெரிவிக்க முடியும் என்பதை இத்தால் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

**தபால் முகவரி : தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசந்துறை**
**கொல்லங்கலட்டி.**

**மின்னஞ்சல் : vnpskks@yahoo.com**

**தொலைபேசி இலக்கம் : 021 224 1130**

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**2025.11.30**

(CR 46002) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சபாரட்ணம் இராஜதுரை (Accountant)

**(உரிமையாளர் -
S.Rajathurai & Co கணக்காய்வு நிறுவனம்)**

**தோற்றம்** 05.06.1947 — **மறைவு** 28.11.2025

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு சபாரட்ணம் இராஜதுரை அவர்கள் கடந்த (28.11.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - கிருஸ்ணமணி தம்பதியரின் மருமகனும், வனிதாவின் அன்புக் கணவரும், லீலாவதி கோபாலபிள்ளை, இரட்ணாம்பாள் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மயூரன் (Singer Finance - Jaffna), சிந்துஜா (Branch Manager Jinasena Jaffna, S.Rajathurai & Co), சுகன்ஜா (உரிமையாளர் - Essar Associates - Colombo, S.Rajathurai & Co), சிவஜா (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசிலா, சிறிகாந், வினோத் (Senior Manager - BOC , Colombo), பிஷ்பதீபன் (UK) ஆகியோரின் மாமனாரும், மகிஷ்ணா (Chundikuli Girls college Jaffna), சண்ஜெய் (St.John's College Jaffna), அபிஷேக் (S.Thomas' College, Mount Laviniya), ஆருஷ் (UK), ஆஷிணி (UK) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**215/18 இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.**

**077 076 1071, 021 222 6967**

**தகவல்:
குடும்பத்தினர்**

(CS 30821) A






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு
## வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் - 2026

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில். நயினாதீவு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் "முதலாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2025 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு "இரண்டாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2025 தொடக்கம் 31.12.2025 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் கட்டளைகள் யாவும் "பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப் படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் "வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2026" எனக் குறிப்பிட்டு " செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிபடுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021-4323440 / 021-0214323447 தொலைபேசி .லக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.

**மதியாபரணம் அம்பிகைபாகன்**
**கௌரவ செயலாளர்**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,**
**நயினாதீவு**

**முதலாவது அட்டவணை – (படிவம் 01)**

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில். நயினாதீவு
### வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்
### 2026 ஆம் ஆண்டு

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-............................................................
2. பிறந்தநாள் :-..................................................
3. இந்துசமயத்தவரா? :-.....................................................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?:-.................................
5. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விவரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- ..............................................................................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற்கட்டளையின் விபரம்:-

காசுக்கட்டளை/ த.க. இல ............................ அலுவலகமும் வழங்கிய நாளும் ................................ தொகை ..................

8. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
9. இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு. வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்

..............................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுதப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தை புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ......... ஆம் ஆண்டு ........ மாதம் ........ நாளன்று .................... என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்

...................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு :- விண்ணப்பத்தாரரின் ஒப்பம் சமாதான நீதிவான்.இந்துமத குரு. இலங்கை நிர்வாக சேவை அலுவலர். கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றக்கொள்ளப்படமாட்டாது. 2025.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை – (படிவம் 02)**

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
### வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான
### விண்ணப்பம் 2026 ஆம் ஆண்டு

செயலாளர்
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

...................... ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன் ........................ அஞ்சலகத்தால் ...................... ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட ................ இலக்கங்கொண்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :-...............................................................................
முகவரி :-...............................................................................
எனக்குள்ள உபயம் :-...............................................................................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :-..............................................

...................................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம், எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ................ஆம் ஆண்டு ......... மாதம் ......... நாளன்று............. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்

...................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு :- விண்ணப்பத்தாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்ராம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 2025.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## வெலிமடையில் மண்சரிவு; இருவர் பலி

வெலிமடை கெப்பட்டிப்பொல பொலிஸ் நிலையத்துக்கருகில் ஏற்பட்ட மண்சரிவில் இரு வர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இந்த மண்சரிவால் வெலிமடை நுவரெலியா வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (ச-இ)

**வேலையாட்கள் தேவை**
ஹோமாகம, கொடகமயில் அமைந்துள்ள பேக்கரிக்கு வேலையாட்கள் தேவை.
தொடர்பு: 077 326 7322




**ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்**
இந்தியாவில் ஆன்மிகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
**அம்மன் அருள்வாக்கு**
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா?
- பிரிவால் வேதனையா?
- தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?
- வளைகாப்பு சடங்கு முறைப்படி செய்து தரப்படும்.

இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்)
தொடர்புகளுக்கு: 077 281 1234



## மரண அறிவித்தல்



பிறப்பு 26 10 1940
இறப்பு 24 11 2025

### திருமதி.மகேஸ்வரி இராமலிங்கம்

சென்டாவளவு இருபாலையை பிறப்பிடமாகவும் கொழும்பு, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.மகேஸ்வரி இராமலிங்கம் 24.11.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தையல்நாயகி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான விநாயகலிங்கம் சோதி தம்பதியினரின் மருமகளும் இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சூரியலிங்கம், சுகந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் முத்துக்குமாரசாமி, திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும் வித்தியாவதி, செந்தில்நாதன் ஆகியோரின் மாமியாரும் ரோசிதா, தருணிகா, கோசிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், அமிர்தயோகம் அருந்ததிதேவி, தேவி, நெல்லைலிங்கம், ரதி, அபயலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.11.2025 அன்று நடைபெற்று எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
தகவல்: குடும்பத்தினர்

**சிறுநீரகம் தேவை**
38 வயதுடைய சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு $O^+$ இரத்த வகைகைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாக தேவை. ஆண், பெண் இருபாலாரும்.
T.P:077 77 43 119
077 66 16 384
(CS 60005) A

**அறை வாடகைக்கு உண்டு**
யாழ் நகரில் படிக்கும் அல்லது வேலை பார்க்கும் பெண் பிள்ளைகளுக்கு அறை வாடகைக்கு உண்டு. இருவர் விரும்பத்தக்கது. சமையல் வசதி உண்டு.
(CS 60020) E
தொடர்பு: 074 017 9784

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

பல்லுப் புடுங்கிடவே சென்றிட்ட மாமிக்கு
சொல்லுதனைக் கேளாத நாக்கினையும் —நல்லாக
சண்டைபோடும் வாயிலுள்ள பற்களையும் வேட்டையாட
கொண்டுவந்தாள் வைத்தியர்க்கு காசு.

பொன்.சுகந்தன்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2056 | கார்த்திகை 14 | ஞாயிற்றுக்கிழமை (30.[illegible]) | சிகரம் :167

மு.தமிழ்ச்செல்வன்

# முல்லைத்தீவில் முதல்நிலை பெற்ற மாணவனின்

# திடீர் மரணமும், மர்மங்களும்!



முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவில் கடந்த 30.09.2025 அன்று இடம்பெற்ற மரணம் ஒன்று அந்த மாவட்டத்தையே சோகத்தில் ஆழ்த்தி உள்ளதுது. குறிப்பாக இந்த மரணத்தால், முல்லைத்தீவு மாவட்ட கல்விச் சமூகம் பெரும் சோகத்திற்குள்ளானது. இறுதிச் சடங்களில் மாணவர்களும் மாணவிகளும்,ஆசிரியர்களும் கண்ணீர்விட்டு அழுதார்கள்.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலத்தில் க.பொ.த உயர்தரத்தில் பொறியியல் தொழிநுட்ப பிரிவில் (e.tech.) கல்வி கற்ற பரமேஸ்வரன் வானுசன் என்ற இருபது வயது மாணவனின் மரணமே அது.பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளையான அவன் இறுதியாக வெளிவந்த க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேறுகளில் குறித்த பிரிவில்; முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் நிலை பெற்றிருக்கிறான்.(First Rank) அமைதியான, பண்பான, ஆசிரியர்களுக்கு கீழ்படிவான நல்ல பழக்கவழக்கங்கள் கொண்ட இந்த மாணவன் ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாகவும் இருந்தான். எனவேதான் இவனது மரணம் அனைவரையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது.

வறுமையான, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த, வீட்டுக்கு ஒரேயொரு பிள்ளையான வானுசன் கற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்று பல்கலைகழகத்திற்கு தெரிவாகியிருந்த நிலையில் , இப்படி திடீரென இறப்பதென்பது யாரைத்தான் கவலை கொள்ளச் செய்யாது ? அதுவும் ஒரு நல்ல பண்பான மாணவன் என்றால் துயரம் இன்னும் பல மடங்காகும். எனவே இதுவும் கடந்து போகும் என்பது போல வானுசனின் மரணமும் சில நாட்கள் பேசப்பட்டது. பின்னர் அப்படியே எல்லாச் சம்பவங்களப் போன்று இதுவும் கடந்து போய்விட்டது. ஆனால் அவனது பெற்றோர் மாத்திரமே இப்பொழுதும் தங்களது ஒரேயொரு பிள்ளையை நினைத்து அழுதுக்கொண்டிருக்கின்றனர்.

கடந்த 19.07.2025 அன்று வீட்டு முற்றத்தில் நின்றுக் கொண்டிருந்த போது தலை சுற்றுகிறது எனச் சொல்லி அப்படியே முற்றத்தில் அமர்ந்தவ வானுசனை அவனது தாய் உடனடியாக பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளார் அங்கிருந்து அவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையான மாஞ்சோலைக்கு மாற்றப்பட்டுள்ளான். வானுசனை பரிசோதித்த மருத்துவர்கள் சொன்ன தகவலைக்கேட்டு வானுசனின் குடும்பமே அதிர்ச்சியில் உறைந்துவிட்டது. ஏனெனில் அவனது சிறுநீரகங்கள் இரண்டும் 95 வீதம் செயலிழந்து விட்டன என்ற மருத்துவர்களின் தகவல் அந்தக் குடும்பத்தின் தலையில் இடியை இறக்கிவிட்டது. அதாவது நாட்பட்ட சிறுநீரக நோய் (ஊமுனுர) .

பெற்றோர் , உறவினர்கள், வானுசனின் நண்பர்கள் என எவராலும் அந்தத் தகவலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் முதல் நாள் வரை அவன் இரண்டு சிறுநீரகங்களும் 95 வீதம் செயலிழந்த ஒருவனைப்போல இருக்கவில்லை. நோய் நொடியற்ற மற்ற எல்லோரையும் போலவேதான் அவனும் இருந்தான். எந்த நோய் அறிகுறிகளும் தென்படவில்லை. எனவே இது எப்படி சாத்தியம்? என்பதுவே பெற்றோர் உட்பட அனைவரினதும் சந்தேகம். இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் வானுசன் இறந்துவிட்டான் என எல்லோரும் அவனது சாவைக் கடந்து சென்றுவிட்டனர். ஆனால் அதற்கான காரணத்தை எவரும் கண்டறிய முற்படவில்லை, அப்படிக் கண்டறிந்து எதிர்காலத்தில் இப்படியொரு சம்பவம் மீளவும் இடம்பெறாதிருக்க என்னசெய்ய வேண்டும் என்றும் எவரும் முயற்சிக்கவில்லை.

இந்தச் சம்பவத்தை நாங்கள் வெறுமனே முல்லைத்தீவு என்கிற ஒரு பின்தங்கிய மாவட்டம் ஒன்றின் கிராமத்தில் 20 வயது மாணவன் சிறுநீரகம் செயலிழப்பால் இறந்துபோனான் என்று கடந்து சென்றுவிட்டோம். ஆனால் இதற்கு பின்னால், அந்த மாணவனின் மரணத்தின் நிழலில் மறைந்திருக்கும் பேராபத்தை எவருமே உணரத்தவறிவிட்டோம்.

எந்த விதமான கெட்ட பழக்கவழக்கங்களும் இல்லாத, எந்த நோய்களுக்கும் மாதாந்த சிகிச்சைகளுக்கு சென்று மாத்திரைகள் எதவையும் இதுவரை பாவிக்காத அந்த 20வயது மாணவனுக்கு எப்படி இரண்டுசிறுநீரகங்களும் செயலிழந்தன?

## வானுசன்


கற்சிலைமடு பண்டாரவன்னியன் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் வரை கற்று , 6ஏ,பி,2சி பெறுபேறுகளை பெற்று உயர்தரம் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் பொறியியல் தொழிநுட்ப பிரிவில் கற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் நிலையினையும் பெற்றவன் தான் வானுசன். ஒட்சுட்டான் கற்சிலைமடு பிரதேசத்தை பூர்வீகமாக கொண்டவன். அவனது பெற்றோரும் அதே இடத்தைச்சேர்ந்தவர்கள். இவனது பிரதேசம் காலம் காலமாக விவசாயத்தை மேற்கொள்கின்ற பிரதேசம் . குறிப்பாக அதிகளவு நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொள்கின்ற பகுதி .முத்தையன்கட்டு குளத்தின் நீர்ப்பாசனத்திற்குட்பட்ட பிரதேசம். காலபோகம், சிறுபோகம் என இரண்டு போகங்கள் வயல் செய்கின்றவர்களை அதிகம் கொண்டு பிரதேசம். தந்தை விவசாயம் மற்றும் கூலித்தொழில் செய்பவர். வறுமைக்குபட்ட குடும்பம். தந்தையின் கஷ்டத்தை உணர்ந்து அவன் அடிக்கடி கூறும் வார்த்தை "அப்பா இன்னும் ஒரு நாலு வருசம் தான் எங்கட கஷ்டமெல்லாம். அதற்கு பிறகு நான் ஒரு இஞ்சினியராக வருவேன். எங்கட கஷ்டமெல்லாம் அதுக்குப் பிறகு பறந்திடும் " என்பதுதான். ஆனால் இப்போதோ அந்த வார்த்தை தவறி, அவனே இந்த உலகை விட்டே பறந்துவிட்டான். அவனது அழகான புகைப்படங்களை பார்த்து தினமும் அழுதுகொண்டிருக்கிறார்கள் பெற்றோர் . உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலைச் சமூகம் என எல்லோரும் அவனைக் காப்பாற்றிவிட போராடியும் கூட, அவர்களால் வெற்றிபெற முடியவில்லை.

## விவசாய நடவடிக்கைகள் 2009 க்கு முன்னரும் பின்னரும்

வன்னியின் விவசாய நடவடிக்கைகள் 2009 க்கு முன்னர் பெருமளவு இயற்கையோடு தொடர்புடையதாகக் காணப்பட்டது. இரசாயன உரங்களும், கிருமிநாசினிகளும் மிக மிகக் குறைவாக பயன்படுத்திய காலம்., விவசாய நடவடிக்கைகளில் இராசயனங்கள் பயன்படுத்தப்படாத காலம் என்றே கூற முடியும். இதன் காரணமாக உற்பத்திப் பொருட்களில் நஞ்சற்ற தன்மை இருந்தது, நிலமும், நீரும் மாசுபடாமல் 'கற்போடு' இருந்தன. ஆனால் 2009 க்குப் பின்னரான காலத்தில் விவசாய நடவடிக்கைள் தலைகீழாக மாறின. அதிகரித்த விளைச்சலைப் பெறுவதற்காகவும், நோய்த்தாக்கங்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கவும் என விவசாயிகள் அதிக இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். இதன் விளைவு உற்பத்திப் பொருட்கள்மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இராசயனங்

14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விகதா

## போரின் கவிதை 39

போரின் கூச்சலில்
உன் கையை விட்டதில்லை நான்…
ஆனால் காலம் கொடூரமாக
என் விரல்களில் இருந்து உன்னை
கிழித்து எடுத்துச் சென்றது.

அந்த ஒரு நொடி
உன் கண்களில் தெரிந்தது பயமல்ல,
என்னை விட்டு நீ
தொலைந்து போகிறாய் என்ற
உணர்வின் அழுகை.
அதை இன்றும் மறக்க முடியவில்லை.

"திரும்பிவா…" என்ற என் கூக்குரல்
உலகத்தின் மூலையெங்கும்
மணல் துகளாய் விழுந்தது.

அந்த நாளிலிருந்து
இதயத்துடிப்பும் மூச்சும்
செயற்கையாக இயங்குகின்றன…
என் கண்கள்
ஒவ்வொரு கூட்டத்திலும்,
ஒவ்வொரு நிழலிலும்

கடந்த பதினெட்டு ஆண்டுகள்
உன்னைத் தேடுகின்றன.

உன்னைத் தேடும் என் மனம்
உயிர்விட்ட கூடாக உலாவுகின்றது..
ஏனெனில்
மரணச் செய்தி வராதவரை
நீ உயிரோடு என்கிறேன்.

காற்று வீசும் போதுகூட
உன் நடைச்சத்தம் கேட்கிறது
இரவு ஆழத்தில்கூட
உன் சிரிப்பு என் காதைத் தொடுகிறது.

என்னை எல்லோரும் கேட்கிறார்கள்:
"அவர் உயிரோடு இருக்க முடியுமா?"
நான் சொல்ல முடியவில்லை…
நான் நம்புவதா,
அல்லது நான் தாங்குவதா?

ஆனால்…
என் உயிர் இருக்கும் வரை
மனக் கதவு திறந்தே இருக்கும்.
ஏனெனில்
உன் வரவில்லையென்றால்
என் வாழ்வே மறுப்பதாகிவிடும்.
எங்கிருந்தாலும் திரும்பிவா!

போரின் நெருப்பில்
உன் வெள்ளை ஆடை அழிந்து

போராளியாகவே தோன்றியிருக்கிறாய்
அதன் உள்ளம் மட்டும்
சுத்தமான கருணையாய் இருந்தது.

"போ பின்னால் வருகிறேன் "

எத்தனை நம்பிக்கையோடு

வழியனுப்பினாய் ……

குழந்தைகளுக்காகப் பிரிந்தேன்
என் கண்களைத் தொட்டுப் பேசிய
உதட்டில் மோதிய காற்றின் வாசம்
இன்னும் என் இதயத்தில் நிற்கிறது.
ஆனால் நீ திரும்பவில்லை…
போராளிகளின் கூடாரம்
உன் வீடானது.

நான் மூன்று குழந்தைகளுடன்
கண்ணீரை நிரப்பிக் கொண்டு
கப்பலில் ஏறினேன்.
நீ வேதனைக்காற்றை உமிழ்ந்து
ஊதியபடி வழியனுப்பினாய்
ஆறு மாதக் குழந்தை இடுப்பிலும்
கையிலும் இரண்டென
பிரிய முடியாமல் பிரிந்தேன்

காதலின் உணர்வுகளுக்கான
கடுமையான தண்டனையென என்
உள்ளம் உணர்ந்தது.

உன் முகத்தையே அறியாத குழந்தை
உன் பெயரை என் தாலாட்டிலிருந்து
கற்றுக்கொண்டது.
கடல் நம்மைத் தாங்கி வந்தது
ஆனால் என் உள்ளத்தின் புயல்
இன்றும் அடங்கவில்லை.
ஒவ்வொரு நாடு, ஒவ்வொரு நகரம்,
ஒவ்வொரு முகத்திலும்

உன் கண்களைத் தேடுகிறேன்.
நீ எங்கே?
எந்தக் சிறைக்கம்பிகளுக்குப்பின்னால்?
எந்த மருத்துவமனையில்?
எந்தக் குண்டின் சத்தத்தில்
உன் பெயர் அடங்கிப் போனது?

இரவு ஆழத்தில்
தாலாட்டுப் பாடலின் இடைவெளியில்
நீ அழைப்பது போல
என் இதயம் அதிர்கிறது.
திறந்த கதவின் நிழல் கூட
உன் உருவம் போலவே தெரிகிறது.

உன் கரங்கள்
பிடிக்க வேண்டிய
பிள்ளைகளின் கைகளை
இன்று நான் மட்டும்
தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

போர் முடிந்தது என்று ஆர்ப்பரித்தார்கள்
போராளிகளைச் சுட்டுப்பிடித்ததாக
குதூகலித்தார்கள்…
பூமி அதிர்ந்ததாய் இதயம் வலித்தது
வீடு திரும்புவார் என்னும்
மகிழ்வு மனதை அணைத்தது…

பிடிபட்டவர்களை
ஒளிப்படங்கள் காட்டத் தொடங்கின..
அது உத்தியோகபூர்வ பதிவு இல்லை
சிதறல் படங்கள், கசிந்த காட்சிகள்,
எந்தக் கருணையும் இல்லாத
மனச்சாட்சியில்லா ஒளிப்படங்கள்

அந்தக் குழப்பத்தின் நடுவில்…
அந்தச் சிதறிய ஒளிப்படத்தின்
ஒரு மூலையில்…
நான் உன்னைப் பார்த்தேன்.
ஒரு நொடி மட்டும்
சிறு கணம் மட்டும்
ஆனால் அந்த நொடி
என் ஆயுள் முழுவதையும்
தழுவி எரித்தது.
உன் தாடை கிழிந்திருந்தது.
உன் கண்கள் சோர்வானாலும்
அது எம்மை நினைத்துக்
கலங்குவது புரிந்தது….
நீ நின்ற இடத்தின்
சித்திரவதைத் தடயங்கள்

ஓர் மருத்துவன் என்னும் மதிப்பற்ற
பதிவுகள்….

அந்தப் பதிவை
எத்தனை பேரிடம் காட்டினேன்
போருக்குப் பிறகு கல்லாய் மாறிய
எத்தனை முகங்களிடம்
கணவனைத் தேடித் தாருங்கள்
என இரஞ்சினேன்

சிலர் ஒரு நொடிக்கு
என் கண்களைப் பார்த்தனர்
அதில் நான் தாங்க முடியாத
பயம் இருந்தது.
சிலர்
பார்க்காமல் தலை குனிந்தனர்
அதில் நான் தாங்க முடியாத
உண்மை இருந்தது

ஆனால் அந்த ஒரு படம்…
அந்த ஒரு நொடி…
அந்த ஒரு உன் உருவத்தை
நினைக்கும்போதெல்லம்
இன்றும் என் உள்ளம்
உயிரற்றதாக நடுங்குகின்றது.

உன்னைக் கண்டுபிடிக்க
நாட்டின் எல்லைகளையும்
என் கண்ணீரால் தாண்டினேன்.
ஒரு காணொலியின் நிழலை
என் வாழ்வின் ஒளியாக மாற்ற
இன்னும் ஓடிக்கொண்டு தான் இருக்கிறேன்.

எங்கேயோ,
எப்படியோ
நீ இன்னும் மூச்சுவிடுகிறாய் என்று
நான் நம்புவது
நம்பிக்கை அல்ல…
உன்னை விட்டுவிட முடியாத
என் உயிரின் பேராசை.

போரின் நெருப்பில்
எல்லோரும் ஓடும் போது
நீ மட்டும்
காயம் அடைந்தவரின் துயரத்திற்காக
இரங்கினாய்.
உன் வெள்ளை மேலாடை
இரத்தத்தில் நனைந்தாலும்
அது இன்னும்
உயிரைக் காப்பாற்றிய கவசமாக
காட்சி தந்தது

நான் அறிந்த என் கணவன்
வீட்டின் அமைதியில் மட்டுமல்ல
இரத்தம் சொட்டிய போர்க்களத்திலும்
அமைதியும் நம்பிக்கையும் தந்தவன்.
உன் தொடுகையும், கருணையும் பலர்
மரணத்தைத் திரும்பப் போக்கியது.

நோயாளிகளின் கண்களில்
நம்பிக்கை ஏற்றினாய்

உன் கைகளால் உயிர் பிழைத்த
எத்தனை உயிர்கள்
இன்று வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.
ஆனால் உன்னைத் தேடி நான்
அலைந்து கொண்டு இருக்கிறேன்.

கருணையில்லா இறைவன்
இரக்கம் கொண்டவர்களை
ஏமாற்றுகிறான்.
எத்தனை காயங்களின் குருதி
உன் உள்ளங்கைகளில் கொட்டின
அந்த ஒவ்வொரு சொட்டிலும்
உன் மனித நேயம் துளிர்த்தது.

நீ இரத்தத்தில் மூழ்கிய போர்க்களத்திலும்
என்னை நினைத்து வாழ்ந்தாய்
ஆனால் நான்
உன் சுவாசம் எங்கே என்றும் தெரியாமல்
உன் முகத்தைத் தேடி
அலைந்துகொண்டிருக்கின்றேன்.

உயிர் காப்பாற்றும் உயரிய கைகளை
இன்று நான் பிடிக்க முடியாத
பூசிக்கமுடியாத துரதிர்ஷ்டசாலியாக…

தூர நட்சத்திரங்களை……
துணைக்கழைக்கின்றேன்.

போர் நின்றுவிட்டாலும்
உன் சேவை நின்றுவிடவில்லை
அது இன்னும்
காற்றின் ஒலியாக
பாதுகாப்பின் பெயராக
உயிர்களின் நம்பிக்கையாக

காப்பாற்றப்பட்டவர்களின் உயிர்களாக
சுற்றிக் கொண்டே இருக்கிறது.

உன் தியாகம்
புகழப்பட வேண்டியது…
ஆனால்
அது போரின் உக்கிரத்தில்
காணாமல் ஆக்கப்பட்டது.

மருத்துவராக வர
எத்தனை தியாகங்கள் செய்தாய் நீ
பசியைப் பொறுத்த இரவுகள்,
நிம்மதியில்லா தேர்வுகள்,
உன் தாயின் கன்னத்தில் வழிந்த
கண்ணீர் அனைத்தும்
உன் பயணத்தின் திருப்பங்கள்.

உன்னைப் போல
அன்பான இரு கைகளின் மீது
நிராயுதபாணி உயிர்கள்
எத்தனை முறை மீண்டுள்ளன.
உன் சுவாசமே
அவர்களுக்கு மருந்தாக இருந்தது
உன் பார்வையே
அவர்களுக்கு உயிரோடிருக்கும்
துணிவாய் இருந்தது.

ஆனால் அந்த நன்மை,
அந்தச் சேவை,
அந்தச் கருணை
ஒரு யாருமற்ற அறையின்
குருட்டு இருளில்
காணாமல் போயிற்று.

உன்னைத்தந்து
நாங்கள் காப்பாற்றப்படும் பாதை
அமைந்ததா?
நீ உயிர் தந்த பாதையில்
உன் அடிச்சுவடுகளுக்கே
ஆதாரம் இல்லை =உன்னை
நிராயுதபாணியாக்கியது காலம்

உன் கனவுகள்
எங்கள் வாழ்க்கையின் கதையில்
அத்தியாயங்களாக விழுகின்றன…
உன் சிரிப்பு
என் இதயத்தின் மூலைகளில்
இன்னும் ஒலிக்கிறது
இரவின் கனவில் பேசும் குரல்
காதலின் ஸ்பரிசத்தை தருகிறது..


உனது தியாகம்
எங்களைக் காப்பாற்றியது ஆனால்
நீயோ
எங்களால் காப்பாற்றப்படவில்லை.
உன் இரத்தத்தால் அமைந்த பாதையில்
நான்
இன்று தனியாக நடக்கிறேன்.

உன்னைக் கொடுத்து
எம்மைக் காத்தாய்…
தேடும் காலம் முடியும் வாழ்வு

வந்து மகிழ்வோமா இறைவா?

ஆரந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# டெங்கு: காய்ச்சலையும் மரணத்தையும் தவிர்ப்போம் !

Dr.நாகராஜா பரமேஸ்வரன்

இலங்கையைப் பொறுத்தவரையில் டெங்குக் காய்ச்சல் மிகவும் ஆபத்தான ஒரு தொற்று நோயாகக் காணப்படுகின்றது. எமது வடக்கு மாகாணத்திலும்கூட டெங்கு நோயின் தாக்கம் மழை காலங்களில் குறிப்பாக ஓகஸ்ட் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப்பகுதிகளில் மிக அதிக அளவில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இந்த ஆண்டு ஏற்கனவே டெங்கு நோயின் தாக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

**டெங்குக் காய்ச்சல் என்றால் என்ன?**

டெங்குக் காய்ச்சல் என்பது டெங்கு வைரசினால் ஏற்படுகின்றது. இந்த டெங்கு வைரசினை இரு வகையான நுளம்புகள் காவிகளாகத் தொழிற்பட்டு மனிதர்களுக்குக் கடத்துகின்றன.
அவையாவன.






1. Aedes Aegypti
2. Aedes Albopictus

டெங்கு நுளம்புகளான மேற்கூறியவை பொதுவாக மனிதர்களுக்கு கடிக்கும் நேரங்களாக காலை 6 - 9 மணி, மாலை 3 - 6 மணி வரையான காலப்பகுதியே காணப்படுகின்றது.

**நுளம்பின் வாழ்க்கை வட்டம்**




பெண் டெங்கு நுளம்பானது ஒரு தடவையில் 100 200 முட்டைகளை இடுகின்றது. இந்த முட்டைகள் நீர்தேங்கக்கூடிய கொள்கலன்களின் விளிம்புகளில் ஒட்டி இருப்பதோடு நீரின்றி இருந்தால் கூட ஒரு வருடத்திற்கு வாழ்தகவு உடையவையாக உள்ளன. மீண்டும் நீருடன் தொடுகையுறும் போது அவை 1= 2 நாட்களில் நுளம்புக்குடம்பிகளாக மாறக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளன.

பெண் நுளம்பானது டெங்கு வைரசினால் தொற்றுக்குள்ளான நிலையில் வைரசானது அதன் முட்டைகளுக்குள் உட்புகக் கூடியதாக உள்ளது.

**டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள்**

1. நீர் தேங்கக் கூடிய போத்தல்கள், பாத்திரங்கள், கொள்கலன்கள்
2. தேங்காய்ச் சிரட்டைகள்
3. கூரைகளின் பீலிகள்
4. தண்ணீர்த் தொட்டிகள்
5. ரயர்கள்
6. மரப்பொந்துகள்
7. அலங்காரப் பூச்செடி கொள்கலன்கள்
8. குப்பை, கூளங்கள்.
9. குளிர்சாதனப் பெட்டிகளின் தண்ணீர்த்தட்டு



**டெங்கு காய்ச்சல் 3 நிலைகளை உடையது**

1. டெங்குக் காய்ச்சல்
2. டெங்கு குருதிப்பெருக்கு நிலை
3. டெங்கு அதிர்ச்சி நிலை

**டெங்கு காய்ச்சல் அறிகுறிகள்**

1. கடுமையான காய்ச்சல்
2. கடுமையான தலைவலி
3. கடுமையான மூட்டுவலி
4. கடுமையான தசைவலி
5. தோளில் சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றுதல்
6. கண்களின் பின்னால் வலி

இந்நோயின் நோயரும்பு காலமாக (அதாவது நுளம்பு கடிப்பதற்கும் நோய் அறிகுறிகள் ஒருவரில் ஏற்படுவதற்கும் இடைப்பட்ட காலம்) 3 -5 நாட்கள் காணப்படுகின்றன.

**டெங்கு குருதிப் பெருக்கு நிலை**

இதன்போது கீழ்க்காணும் குணம்குறிகள் ஏற்படலாம்

1. தோலின் கீழ் செந்நிறப்புள்ளிகள் காணப்படுதல்
2. மூக்கிலிருந்து இரத்தம் சிந்துதல்
3. சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல்
4. மலத்துடன் இரத்தம் வெளியேறுதல்
5. வாந்தியுடன் இரத்தம் வெளியேறுதல் இந்நிலையில் இறப்பும் ஏற்படலாம்.

**டெங்கு அதிர்ச்சிநிலை அறிகுறிகள்**

1. உடல் குளிர்தல்
3: வேகமான நாடித்துடிப்பு
5. பலவீனமான நாடித்துடிப்பு
2. கடும் வியர்வை
4. வேகமான சுவாசம்
6. மயக்கம் ஏற்படுதல்
7. இறப்பு ஏற்படலாம்




**டெங்கு காய்ச்சல் என சந்தேகித்தால்**

1. பூரண ஓய்வு (5 - 7 நாட்கள்) கட்டாயமாக அவசியமானது
2. பாடசாலை/வேலைக்கு செல்வதைத் தவிர்த்தல்
3. போதிய நீராகாரங்கள் உள்ளெடுத்தல்
4. காய்ச்சல் இருப்பின் பரசிற்றமோல் வில்லைகள் பாவிக்கவும்
5. அஸ்பிரின் வில்லைகள் பாவிக்கக் கூடாது
6. தகுந்த மருத்துவ ஆலோசனை பெறுதல்
7. தேவை ஏற்படின் மருத்துவமனையில் சேர்த்தல்

**டெங்கு காய்ச்சல் பரம்பலுக்கு அனுகூலமான காரணிகள்**

1. மழைவீழ்ச்சி
2. சுதந்திரமான போக்குவரத்து
3. பொதுமக்கள் நெருக்கமாகக் கூடும் இடங்கள் (பாடசாலைகள், தனியார்கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள்)
4. சீரற்ற திண்மக்கழிவு முகாமைத்துவம்
5. நீர் தேங்கி நிற்கும் வடிகால்கள்
6. பராமரிப்பற்ற காணிகள்




## டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள்

1. நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல் (மீன்தொட்டிகளில் அடிக்கடி நீரை மாற்றுதல் =வாரத்துக்கு 2 தடவை)
2. நீர்ப்பீலிகள் குப்பைகளை அகற்றி நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளல்
3. வடிகால்களை நீர் தேங்கி நிற்காதவாறு தினமும் சுத்திகரித்தல்
4. திண்மக் கழிவு முகாமைத்துவம் = தினசரி சிரமமாக அகற்றி உரிய முறையில் அழித்தல்
5. வீடுகளை வாரம் 2 தடவை சுற்றிப்பார்த்து நீர்தேங்கி நிற்கக்கூடிய பாத்திரங்கள்,
6. கொள்கலன்களை அகற்றுதல் (சிரட்டைகள், இளநீர், கோம்பைகள், தகரப்பேணிகள்)
7. பாடசாலைகள், அரச நிறுவனங்களின் வாரம் ஒரு முறையேனும் சிரமதானம் மேற்கொள்ளுதல்
8. நீளமான மேலங்கி, காற்சட்டை போன்றவற்றை நுளம்பு கடிக்கும் நேரங்களில் அணிதல்
9. நுளம்பு விரட்டிகளைப் பயன்படுத்துதல்
10. வீட்டின் போதிய ஒளி இருப்பதை உறுதிப்படுத்தல்
11. டெங்கு நோயினைக் கட்டுப்படுத்துவதிலும், டெங்கு மரணங்களைத் தடுப்பதிலும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரது பங்கும் முக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில்...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள நிறைந்ததாக மாறியதோடு, நிலமும் நீரும் எனச் சூழலும் மாசுபடத் தொடங்கியது.

வானுசனுடைய பிரதேசத்தில் விவசாயிகள் தங்களுடைய நெற்பயிர்களுக்கு யூரியா, டிடிஎம், பொட்டாசியம் என ஒரு ஏக்கர் வயலுக்கு சுமார் 100 கிலோ கிராம் இரசாயன உரத்தைப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறே சுமார் ஒரு லீற்றர் வரை கிருமி நாசினியை பயன்படுத்துகின்றனர். சுமார் 5000 ஏக்கர் வயல்நிலங்களை கொண்ட ஒரு பிரதேசத்தில் இரண்டு போகமும் இவ்வாறு இராசயன உரத்தை பயன்படுத்தினால் வருடம் ஒன்றுக்கு ஐந்து இலட்சம் கிலோ கிராம் இரசாயன உரமும், பத்தாயிரம் லீற்றர் கிருமிநாசினியும் பயன்படுத்தப்படும். தேவைக்கு அளவான இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்ற போது பயிர்கள் மட்டுமே அவற்றை பெற்றுக்கொள்ளும் ஆனால் தேவைக்கு அதிகமான பயன்படுத்தப்படுகின்ற இரசாயனங்கள் அனைத்தும் நிலத்தோடு கலந்து, அந்த நிலத்தையும் நீரையும் நஞ்சடைய வைக்கின்றன.

## பிரதேச மக்களின் குடிநீர்

இந்த பிரதேச மக்கள் அனைவரினதும் குடிநீர் உள்ளிட்ட அனைத்து தேவைகளுக்குமான நீர், கிணறுகளிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகிறது. இங்குள்ள கிணறுகள் அனைத்தும் வயல் நிலங்களை அண்டியதாக அல்லது விவசாய நிலங்களின் கீழ்ப்பகுதிகளில்தான் காணப்படுகின்றன. எனவே 2009 க்குப் பின்னரானகாலத்தில் அதிகளவு இரசாயனங்களின் பயன்பாட்டால் பெரும்பாலும், நிலத்தடி நீர் பார உலோகங்கள் கலந்த நீராக மாறியிருக்கிறது.

தொழிற்சாலைகளின் கழிவுகள், எண்ணெய்க் கசிவுகள், விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் மூலம் நிலத்தடி நீரில் பார உலோகங்கள் சேர்கின்றன. கட்மியம், ஆசனிக்,துத்தநாகம், நைற்றேட் ,இரும்பு, தாமிரம்,ஈயம்,பாதரசம் போன்ற பார உலோகங்கள் நீரில் கலப்பதனால் அந்த நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நீராக மாறுகிறது. இது மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றாகவும் உள்ளது. இந்த நீரை தொடர்ச்சியாக அருந்துபவர்களுக்கே சிறுநீரகங்கள் செயலிழக்கும் நிலை பெருமளவில் ஏற்படுகிறது.

### முல்லைத்தீவும் நாட்பட்ட சிறுநீரகப் பாதிப்பும்

வடக்கில் சனத்தொகை குறைந்த மாவட்டமான முல்லைத்தீவில் (122,540 பேர்) அதிகரித்த சிறுநீரக நோயாளிகள் உள்ளமை ஒரு அதிர்ச்சியான தகவலே. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிபரக் கிளையின் 2024 ஆம் ஆண்டின் வருடாந்தத் தகவல் திரட்டின் படி முல்லைத்தீவில் 921 பேர் நாட்பட்ட சிறுநீரக நோயால் (ஊமுனுர) பாதிக்கப்பட்டுள்ளனர் இவர்கள் அதற்கான மாதாந்தக் கொடுப்பனவை பெற்று வருகின்றனர். இந்த எண்ணிக்கை என்பது கொடுப்பனவு பெறுகின்றவர்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது. ஆனால் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதனை விட அதிகமாகவே இருக்கும் என்பதே உண்மை.

இதில் மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலக பிரிவில் 242 பேரும், அதற்கு அடுத்தபடியாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் ( வானுசனின் பிரதேசம்) 171 பேரும் சிறுநீரகப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இது ஒட்டுசுட்டான் பிரதேச சனத்தொகையில் இது சுமார் 2 வீதமாகும். மேலும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 168 பேரும்,மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 152 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 109 பேரும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 79 பேரும் என நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மாதாந்த உதவு தொகைக் கொடுப்பனவுக்காகமுல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கடந்த ஆண்டு அறுபத்தாறு இலட்சத்து பதினைந்தாயிரம் (66,015000.00) வழங்கியிருக்கிறது. இந்த எண்ணிக்கையும், நிதியின் அளவும் வருடாந்தம் அதிகரித்துச் செல்கிறது.

பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பிரதேசத்தை சேர்ந்த மக்களே இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளமை புள்ளி விபரங்கள் மூலம் மிகத் தெளிவாக புலப்படுகிறது. இதற்கான பிரதான காரணம் அவர்கள் குடிநீருக்கு பயன்படுத்தும் நிலத்தடி நீராகும். நாட்பட்ட சிறுநீரக நோய் ஏற்பட பல்வேறு காரணங்கள் உள்ள போதும் முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்த வரை குடிநீரே பிரதான காரணமாக அமைந்துள்ளது என துறைசார்ந்தவர்கள் கூறுகின்றனர்.

நாட்பட்ட சிறுநீரக பாதிப்பென்பது, நோயாளிகள் பலருக்கும் அந்த நோய்த் தாக்கத்தின் இறுதிக் கட்டத்திலே தெரியவருகிறது என்கின்றனர் மருத்துவர்கள் ஆதாவது சிறுநீரகங்கள் இரண்டும் தங்களால் முடிந்தளவு இயங்கிக்கொண்டிருக்கும் எனவும் இயங்க முடியாத கட்டத்திலேயே தன்னால் இனிமேல் இயங்க முடியாது என்ற அறிகுறியை அவை வெளிப்படுத்தும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனாலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதிகளிலிருந்து அவ்வவ்போது அதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியிருந்தாலும் அதனை நாம் பொதுவாக வழமையான நோய்களாக, , சாதாரண விடயங்களாக எண்ணி கவனிக்க தவறியிருப்போம் எனவும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். முக்கியமாக வானுசன் போன்ற இளையோருக்கு சிறுநீரகப் பாதிப்பு தொடர்பான அறிகுறிகள் ஏற்பட்டிருந்தாலும் மருத்துவர்கள் உட்பட எவரும் அந்த கோணத்தில் சிந்தித்திருக்கமாட்டார்கள் என்றும் சிறுநீரக மருத்துவ நிபுணர்கள் சொல்கின்றனர்.

### எங்களுக்கு சிறுநீரகம் பாதிக்கப்படவில்லேயே

நாங்களும் இந்த பிரதேசத்தில்தான் வாழ்ந்து வருகின்றோம் எனக்கு 52 வயது. எனது தாயாருக்கு 79 வயது. நாங்களும் இந்தத் தண்ணீரையே அன்று தொடக்கம் இன்று வரை குடித்துவருகின்றோம் .அப்படியிருக்க ஏன் எங்களது சிறுநீரகங்கள் பாதிக்கப்படவில்லை? . எங்கள் மகனுக்கு மட்டும் இந்த இளவயதில் எப்படி சிறுநீரகங்கள் பாதித்தன? என்று கேட்கிறார் வானுசனின் தாயார். நாட்பட்ட சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்களின் குடும்பத்தினர் மத்தியில் இந்தக் கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது . எங்களது முன்னோரின் வாழ்க்கையும், அவர்களது உணவு முறைகளும் இயற்கையோடு இயைந்திருந்தன. அவர்கள் வாழ்ந்த சூழல் மாசுபாடின்றியும் இருந்தது. ஆனால் இன்று அவ்வாறில்லை. காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோய் (ஊமுனுர) என்பது பல்வேறு காரணங்களின் பொருட்டு ஏற்படுகிறது மாசுபட்ட நீர், உணவுப் பழக்கம், வலி நிவாரணி மாத்திரைகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தல், பாம்புக் கடிக்கு முறையான சிகிச்சை பெறாமை, விவசாய நடவடிக்கைகளில் அதிகளவு இரசாயனங்களின் பயன்பாடு என இதற்கு ஏராளமான காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால் எங்களது முன்னோர்கள் இந்த பாதிப்புகளிலிருந்து விடுபட்ட ஒரு வாழ்க்கையினை வாழ்ந்தவர்கள், அவர்களுக்கு உணவே மருந்தாக இருந்தது. ஆனால் இன்று உணவே நஞ்சாக மாறியிருக்கிறது. எனவே அவர்களின் உடல் இயல்பு, அவர்களது காலத்தில் அவர்களது உடல் உழைப்பு, வாழ்க்கை முறை என்பன அவர்களை இதிலிருந்து பாதுகாத்திருக்கலாம்.

ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை எல்லாமே மாறிவிட்டது. இயற்கையை விட்டு விலகிய வாழ்க்கை முறை, தொடக்கம் உணவு பழக்கம், வரை ஆரோக்கியத்திற்கு எதிரான சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் அந்த பிரதேசங்களின் பொருளாதார, வாழ்க்கை முறைகளை வைத்துக் கொண்டு நாட்பட்ட சிறுநீரக நோய்க்கான காரணத்தை துறைசார்ந்தவர்கள் கூறுகின்றனர். அதனடிப்படையிலேயே முல்லைத்தீவு மாட்டத்தில் பெருமளவுக்கு பொருத்தமற்ற குடிநீர்ப் பயன்பாடே இதற்கான முதன்மைக் காரணமாக இருக்கலாம் என்பது அவர்களது முடிவாக அமைந்துள்ளது.

நாம் உடல் உள ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும், முறையான மருத்துவ ஆலோசனைகளும், சிகிச்சைகளும் ஆரம்பம் தொடக்கம் பெற்றுக்கொள்வது அவசியம். வடக்கில் அதிகரித்துச் செல்லும் நாட்பட்ட சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்த வேண்டும் தவறின் இதுவொரு அனர்த்தமாக மாறிவிடும். எனவே வானுசன் போன்றவர்களின் மரணங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். வானுசனே இவ்வாறு மிகை இரசாயனப்பாவனையால் பலியெடுக்கப்பட்டவர்களில் முதலும் இறுதியுமாக இருக்க வேண்டும்.

## உள்ளெரியும் சுடர்....

கடுங்குளிர் கார்த்திகை மழைப் பொழிவு
உள்ளெரியும் பெரு நெருப்புச் சுவாலை
வீரம் நிறை மண்ணின் உயிர்க்கொடை
நினைவுகளுடன் தொழுது கசியும் விழிகள்
விண் பரப்பிலும் விகசித்த அழுகை
மரங்களும் உதிர்க்கும் வணக்கப் புக்கள்
காலம் கடப்பினும் கலையா உணர்வுகள்
நேயம் வைத்தவர் அழியா நினைவுகள்
திரளாய் அலையும் பஞ்சு மேகங்கள்
உணர்வாய் நெஞ்சுள் உருளும் உருக்கள்
பொற்கதிர் சூரியன் அடங்கும் நேரம்
அற்புத ஈகத்தின் பேர் ஒளிர்வுகள்
உடைந்த கற்களும் மண் துகள்களும்
புனிதர்களின் வாழ்வின் அதி அடையாளங்கள்
காணும் போதெல்லாம் கொள்கை மிளிர்ந்தவர்
போகும் திசையெல்லாம் வெற்றி கொண்டவர்
சாவிற்கு அர்த்தம் தந்த வரலாறுகள்

காலச் சக்கரம் சுழன்று சுற்றியது
கோலமாய் வாழ்ந்த சீலரின் வாழ்வு
காலமானதாக கதை ஒன்றுமில்லை
உரையடுத்து மணியொலிக்க உள்வணக்கம்
உயிர்ப்பாடல் இசை கேட்டு சுடர் கனலும்
புமி புகழ் வாழ்வு கொண்டோர்க்கு
எம் அகத்தினுள்ளும் ஓர் உயர்விளக்கு.

- பூராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகர்ந்தது...

முல்லைத்தீவு - நாயாற்று பாலம் வெள்ளப்பேரிடர் காரணமாக தகர்ந்து வீழ்ந்துள்ளது. இதனால், அந்தப் பகுதியூடான போக்குவரத்து துண்டிக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து சுமார் 19 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவு - கொக்கிளாய் - திரு கோணமலை வீதியிலுள்ள நாயாற்று பாலமே இவ்வாறு தகர்ந்து வீழ்ந்துள் ளது. அந்தப் பகுதிகளில் வெள்ளத் தின் வீச்சு அதிகரித்துள்ளது என்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## வடக்கு...

டித்வா புயல் காரணமாக வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரத்து 803 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட் சத்து 31 ஆயிரத்து 290 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று இடர் முகா மைத்துவ மத்திய நிலையம் அறிவித் துள்ளது. இது தொடர்பில் அந்த நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

டித்வா புயல் காரணமாக வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரத்து 803 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட் சத்து 31 ஆயிரத்து 290 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப் பாணம் மாவட்டத்தில் 10 ஆயிரத்து 5 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயி ரத்து 871 பேரும், மன்னாரில் 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 பேரும், வவுனியாவில் 2 ஆயிரத்து 865 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 666 பேரும், முல்லைத்தீவில் 670 குடும்பங்களைச் சேர்ந்த 782 பேரும், கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 950 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 25 பேரும் இவ்வாறு பாதிக் கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளார். ஏனைய மாவட்டங்களில் தற்போதுவரை இறப்புகள் பதிவாக வில்லை - என்றுள்ளது. (அ-ம-26)

## முதியோர்...

குருநாகல் பன்னலவிலுள்ள முதி யோர் இல்லமொன்று வெள்ளத்தில் மூழ்கியதில் 11 பேர் உயிரிழந்துள்ள னர்.

25 பேர் அந்த முதியோர் இல்லத்தில் வசித்துவந்த நிலையிலேயே வெள் ளத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ள னர். ஏனையவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு இடைத்தங்கல் முகாம் களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (அ-ம)

## வெள்ளப்...

கப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறி வித்துள்ளது. 2 இலட்சத்து 34 ஆயி ரத்து 503 குடும்பங்களைச் சேர்ந்த 8 இலட்சத்து 33 ஆயிரத்து 985 பேரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்தோரின் எண் ணிக்கை 159ஆக அதிகரித்துள்ளது.

203 பேர் காணாமற் போயுள்ள நிலை யில், அவர்களை மீட்பதற்கு விரை வானநடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. காணாமல் போனவர் களில் பலர் மண்சரிவில் சிக்குண்ட தால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக் கும் அபாயம் உள்ளதாகவும் கூறப்படு கின்றது. (அ-ம)

## யாழ்.பல்கலையில்...

மன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதா வது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிக கற்கை கள் பீடத்தைச் சேர்ந்த 19 தென்னி லங்கை மாணவர்கள் கடந்த 21ஆம் திகதி 15 மாணவர்களை வெளியிடத் துக்கு அழைத்துச் சென்று பகிடிவதை யில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப் பாடு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்த பொலிஸார் 19 பேரையும் கைது செய்து யாழ்ப்பாணம் நீதவான நீதி மன்றத்தில் நேற்று முற்படுத்தினார் கள். இதையடுத்தே, அவர்கள் அனைவரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

## குளங்களின்...

இருக்கவேண்டும் என்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழக புவியியற் றுறை பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

டித்வா புயலால் வடக்கு மாகாணத்துக் குக் கிடைத்துவந்த மழைவீழ்ச்சி எதிர் வரும் நாள்களில் மெல்லமெல்ல குறைவடையும். ஆனால், குளங்க ளுக்கான நீர்வரத்து தொடர்ந்தும் அதிகரிக்கும். எனவே, தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம் - என்றார். (அ-ம)

## கிராம...

பரந்தன் இந்துமகாவித்தியாலயத்தில், தங்கியுள்ள பொதுமக்களுக்கு இடர் கால உதவிப் பொருள்களை வழங்கி யபோது ஏற்பட்ட வாக்குவாதம் காரண மாக, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கிராம அலுவலர் ஒரு வரைத் தாக்கியுள்ளார் என்று அந்தப் பகுதி பொதுமக்கள் கூறியுள்ளனர்.

டித்வா புயலால் இடம்பெயர்ந்த மக் களில் சிலர் பரந்தன் மகா வித்தியால யத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப் பினர் இளங்குமரன் உணவு வழங்கு வதற்காகச் சென்றபோது, பிரதேச செயலகம் ஊடாக அங்கு சமைத்த உணவுகள் வழங்கப்படுகின்றன என் றும், பிரதேச செயலகத்தின் ஊடா கவே சமைத்த உணவுகளை வழங்கு மாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள் ளது. உலர் உணவுகளை வழங்க எந்தத் தடையும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

சமைத்த உணவு வீணாகக்கூடாது என்ற நோக்கத்துக்காகவே இந்த அறிவுறுத்தல் அவருக்கு வழங்கப்பட் டுள்ளது. இதை இளங்குமரன் எம்.பி. ஏற்க மறுத்ததுடன் அந்தக் கிராம அலுவலருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டுள்ளார். இதைத் தொடர்ந்தே, அவர் கிராம அலுவலர் மீது தாக்குத லும் நடத்தியுள்ளார் எனக் கூறப்படு கின்றது. தமது கிராம அலுவலர் மீது தாக்குதல் நடத்தியமைக்காக அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத் தியதைத் தொடர்ந்து, இளங்குமரன் எம்.பி. அங்கிருந்து சென்றுள்ளார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை இளங்குமரன் எம்.பி. திட்டவட்டமாக மறுத்துள்ளார். தன்னுடன் முரண்பட்ட நபர் அரசியல் பின்னணி உடையவர். இதுவொரு திட்டமிட்ட சூழ்ச்சி. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளோம் என் றும் இளங்குமரன் எம்.பி. கூறியுள் ளார். (அ-ம-26)

## எலிக்...

சேர்ந்த நபரொருவர் எலிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார். சுப்பிர மணியம் யோகேஸ்வரன் (வயது-68) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவரா வார்.

கடந்த 27ஆம் திகதி காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அவர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே மேலதிக சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார். இரு தினங்களுக்கு முன் னர், இளைஞர் ஒருவர் எலிக் காய்ச்ச லால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக் கது. (அ-ம-26)

## மன்னார்...

முகாமைத்துவ மத்திய நிலையம் அறி வித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்க ளம் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் உள்ளதாவது:-

மன்னாரில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றான கட்டுக்கரைக் குளத்துக்கு நீர்வரத்து அதிகரித்துள் ளது. இதனால், பரப்புக்கடந்தான் மற்றும் அடம்பன் உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும். நிலைமை தீவிரமானால் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்வ தற்கான முன்னாயத்தங்களை அவர் கள் மேற்கொள்வது சிறந்தது - என் றுள்ளது. (அ-ம-56)

## குருதிக்கொடை...

முகாம் தொடர்பில், வல்வெட்டித்துறை குருதிக்கொடை சங்கச் செயற்பாட் டாளர் விசாரணைக்கு அழைக்கப்பட் டுள்ளார்.

வல்வெட்டித்துறை மண்ணின் மைந் தர்கள் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை குருதிக்கொடைச் சங்கத்தின் ஊடாக கடந்த நவம்பர் 26ஆம் திகதி வல் வெட்டித்துறையில் குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது. இதற் காக, வல்வெட்டித்துறை குருதிக் கொடைச் சங்கத்தின் தலைவர் பா.வீர சுரேந்திரன் பொலிஸார் மற்றும் புல னாய்வுப்பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாகவே, அவர் குற் றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள் ளார். (அ-ம-100)

## 200இற்கும்...

மேலும் தெரிவித்ததாவது:-

டித்வா புயல் காரணமாக நாடு முழு வதும் பல வீதிகள் மற்றும் பாலங் களுக்குக் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதன்படி, பிரதான வீதிகள் உட்பட நாடு முழுவதும் 206 வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அத் துடன், 10 பாலங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், நுவரெலியா மற்றும் அனுராதபுரம் நகரங்களுக் கான அனைத்து நுழைவு மற்றும் வெளியேறும் வீதிகளும் தடைப்பட் டுள்ளன - என்றார். (அ-ம)

## இலங்கையில்...

இது தொடர்பில் அவர் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் உள்ள தாவது:-

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை புயலாக மாற்றமுற்று கடந்த மூன்று நாள்களாக இலங்கையில் பேரழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. நேற்று மாலை புயலின் உள்வளை யம் கடலைச் சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து நேற்று இரவு புய லில் வெளிவளையமும் கடலுக்குள் சென்றது.

இதன் காரணமாகவே, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் காற்றின் வேகம் அதிக ரித்திருந்தது. அத்துடன் கனமழை யும் கிடைத்தது. எனினும் தற்போ தைய நிலைமைகளின் அடிப்படை யில் அச்சப்பட எதுவுமில்லை. ஆனால் மண் நெகிழ்வான நிலை யில் இருப்பதனால் மரங்கள் பாறி விழக்கூடும். மின் கோபுரங்கள் சரிந்து மின் வடங்கள் அறுந்து விழக் கூடும். ஆகவே இவை தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண் டும் - என்றுள்ளது. (அ-ம)

## இலங்கை...

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் நல்வாழ்வை உறுதி செய்வ தற்கும், பொது வாழ்க்கையை மீட்டெ டுப்பதற்கும், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் சேவைகள் மக் களுக்குக் கிடைப்பதை உறுதிசெய் யும் விதமாகவும் இந்த அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந் தித குமநாயக்கவின் கையொப்பத்து டன் இந்த அவசரகாலச் சட்டம் அறி விக்கப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னாருக்கான போக்குவரத்து முற்றாகத் துண்டிப்பு!

மன்னார் மாவட்டத்துக்கான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மன்னாரில் உள்ள பெரிள குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே, முற்பாதுகாப்பு நடவடிக்கையாக மன்னாருக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. (ம)

# எலிக்காய்ச்சல் அபாயம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் எலிக்காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வயல்வெளிகளுக்கு அருகில் இருப்பவர்கள் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. தசை வீக்கம், வாந்திபேதி உள்ளிட்ட அறிகுறிகளும் எலிக்காய்ச்சலினால் ஏற்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் குறித்த நோய் அறிகுறிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் சுத்தமான நீரைப் பயன்படுத்துமாறும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# குருநாகலில் மண்சரிவு ஐவர் பலி

குருநாகல் மாவட்டத்தில் குருஸ்ஸ பகுதியில் நேற்று ஏற்பட்ட மண்சரிவில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதோடு 3 பேர் காணாமற்போயுள்ளனர். மேலும் 10 பேர் தொடர்பில் எதுவித தகவலும் வெளியாகவில்லை. அதே மாவட்டத்தில் இப்பாகமுவ பகுதியில் ஏற்பட்ட மற்றுமொரு மண்சரிவில் 10 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் குருநாகல் மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (சி)

**Spoken English & Grammar**
2025 Advanced Level எடுத்தவர்களுக்கு
International School Students
K.Ganesh B.A (Pera)
யாழ் கந்தர்மடம்
077 766 8725

**வீட்டு வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டுவேலையாள் தேவை. அனுபவமுள்ள 30 வயதுக்கு உட்பட்ட பெண்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.
071 744 3185

**வேலைவாய்ப்பு**
யாழ் நகரில் காட்வெயர் கடைக்கு வேலை பழக விரும்பும் ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:-
074 226 2271
(CS/30813) J-1

**வீடு, காணி விற்பனைக்கு**
வட்டுக்கோட்டை, மூளாய் வீதி, உடுக்குவளை பிள்ளையார் கோயில் அருகாமையில் 3 பரப்பு 4.23 குளி காணியும், நல்ல நிலையில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
உரிமையாளர் Whatsapp - +61 401 107 584
ஆதவன் - 077 248 7024
(CS/59998) J-1

**கடைத் தொகுதி வாடகைக்கு**
பிரதான வீதியினோடு அமைந்த வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு. காட்சியறைகள், சுப்பர் மார்க்கெட்டுகளுக்கு உகந்த இடம்.
முகவரி : உடுவில் வீதி, மானிப்பாய்
077 844 5554 / 075 158 8834
(CS 60024) E


**வீடு விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் நாவலர் றோட் ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் அமைதியான சூழலில் நவீன முறையில் 3 பரப்புடன் கூடிய Tiles பதிக்கப்பட்ட அழகியவீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
07771 07771, 077 333 5200
(CS/60030) J-1

**வேலைக்கு ஆட்கள் தேவை**
வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.
வயது எல்லை 20 - 40 க்கு உட்பட்ட ஆண்கள் தேவை.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
- மேற்பார்வையாளர் (Supervisor)
- இயந்திர இயக்குனர் (Machine Operator)
- சரக்கறைக் காவலர் (Store Keeper)
- ஓட்டுனர் (Drivers)
- நாட்டாமை தொழிலாளர்கள்
- கூலித்தொழிலாளர்கள் (Laborers)

தொடர்புகளுக்கு:
RG Brothers, No: 228, Canel Road, Elakanda Hendala Wattala.
077 434 6367
(CS 60032) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 08 . 1944
மறைவு 29 . 11 . 2025



### பொன்னுத்துரை தனபாலச்சந்திரன் (சோதி)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தனபாலச்சந்திரன் (சோதி) (Rajan Coolbar - உரிமையாளர்) அவர்கள் நேற்று (29.11.2025) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பவளராணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - மங்கையற்கரசி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற ராஜதுரை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (Canada), காலஞ்சென்ற கனகராஜா (உரும்பிராய்) மற்றும் பாலசரஸ்வதி (Colombo), பாக்கியராஜா (Canada), கமலாவதி (Canada), விமலாவதி, புஸ்பவதி (London), பத்மாவதி (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதா, சரோஜா, மஞ்சுளாதேவி, காலஞ்சென்ற துரைராஜா மற்றும் விஜயரட்டினம், செல்வராஜா, சிவநாதன், கிருபாநந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சண்முகராஜா, தவராணி, ஜெயரூபன் (UK), வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோமதி (UK), சர்வேந்திரன் (UK), கேதீஸ்வரன், யசோதா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஜ்குமார் (UK), தாரணி (UK), நாகலோஜினி (யசி), திருவருள் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சன், ஆருசன் (UK), கோகுல்நாத் (Kokuvil Hindu College - Student), கபின், ரக்சன் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னசத்திர லேன் கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
076 651 6733
077 394 5190
(CR 49596) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.